


சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை – 9

பெண் பூப்பின் புனித வழிபாடு

[Vulva worship, Lilith, Kali, Dagini, Sashthi]

முனைவர் செ. இராஜேஸ்வரி

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை. Ph. 7010997639

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை - 9

பெண் பூப்பின் புனித வழிபாடு

[Vulva worship across the world]

முனைவர் செ. இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை. Ph. 7010997639

நூல் விவரம்

நூல் வரிசை	:	சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்வரிசை - 9
நூலின் பெயர்	:	பெண் பூப்பின் புனித வழிபாடு
துறை	:	சமூகப் பண்பாட்டு ஆய்வு
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/422, திருவள்ளுவர் தெரு தினமணி நகர், மதுரை – 625 018
பதிப்பு	:	2022
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	122
விலை	:	Rs.200/-

- - - - -

Book Series	:	A Series of Socio Cultural Study –9
Book	:	Vulva worship across the World
Subject	:	Socio Cultural Studies
Author	:	Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Designer	:	C. Meenatchi
Publisher	:	Chandrothayam Pathippagam 3/422, Thiruvalluvar Street Dinamani Nagar, Madurai – 625 018
Publish	:	2022
Pages	:	122
Price	:	Rs.200/-

அன்புக் காணிக்கை

விவரம் தெரிந்த நாளில் இருந்து நான் வணங்கும் தனிப் பெண் கடவுள் பராசக்திக்கு இந்நூல் அன்புக் காணிக்கை.



அணிந்துரை

உலகளாவிய வகையில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் இதுவரை நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமையான தெய்வ வடிவங்களாக அமைபவை தாய் தெய்வங்களாகும். அச்ச உணர்வும், பாதுகாப்பு வேண்டும் என்ற ஆழ்மனதின் வேட்கையும் ஒன்றிணையும் போது பண்டைய மனிதர்கள், இயற்கையையும், குழந்தையை ஈன்றெடுக்கும் பெண் உடலையும் தாய்த்தெய்வமாக வடித்து அவற்றை வணங்கினர். ஹோலெஃபெல்ஸ் வீனஸ், வீனஸ் ஆஃப் வில்லண்டோர் ஆகியவை இவற்றிற்குச் சான்றுகளாகின்றன. ஆயினும் காலப்போக்கில் ஆணாதிக்கச் சிந்தனை என்பது எழும் போது அது தாக்கி எதிர்கொண்ட ஒன்றாக வழிபாட்டு அமைப்பில் இடம்பெற்றிருந்த பெண்தெய்வங்களின் நிலை அமைந்து போனது.

மக்களின் மனதில் உயர்ந்த நிலையில் வைத்துப் பூசிக்கப்படும் பெண் தெய்வங்களை

எதிர்கொள்வதற்கு ஆணாதிக்க சமயவாதிகளுக்கு கிடைத்த ஒரு கருவியே புராணங்கள் எனலாம். கட்டுக் கதைகளால் உருவாக்கப்படுகின்ற புராணங்களைச் சமயவாதிகள் தங்கள் இலக்கை அடைய எளிதாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதை வரலாறு வெளிப்படுத்துகின்றது. வலிமை மிக்க பெண்தெய்வங்களுக்கு வழங்கப்பட்டு வந்த முக்கியத்துவத்துவத்தைக் குறைக்க புதிய புதிய புராணக்கதைகளை ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட சமயவாதிகள் உருவாக்கினர். மக்களின் சிந்தனையில் ஆண்தெய்வங்களின் பராக்கிரமங்களும் மேலாண்மையும் பதியத் தொடங்கிய பின்னர், பெண் தெய்வங்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு நீட்சியடையும் நிலையில் அவை மக்கள் மனதில் நிற்க முடியாமல் காலப்போக்கில் மறைந்து போய்விடுகின்றன. மூத்த தேவி அல்லது ஜேஷ்டாதேவி என்ற பெண் தெய்வத்தை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இப்பண்பாட்டு மாற்றம் என்பது ஒரே நாளில் நிகழ்ந்ததா என்றால் இல்லை என்பதே நமக்கு விடையாகின்றது. பெண் தெய்வங்களின் மதிப்பை இறக்கவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் புராணக் கதைகளை மையக் கருவியாகக் கொண்டு இது நிகழ்த்தப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதோடு, இவை பெண் உடலைத்

தாழ்த்தும் போக்கையும் பெண் பலகீனமானவள் என்ற கருத்தைப் புகுத்த பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

ஆணாதிக்கச் சிந்தனையாகிய, பெண்ணை தரம் தாழ்த்துவது, பெண் உடலை பாவப் பொருளாகவும் தீட்டுப் பொருளாகவும் தாழ்த்துவது, பெண் பலகீனமானவள் என்ற கருத்தை வலித்து திணிப்பது போன்ற கருத்தாக்கங்களை ஆண் மட்டுமன்றி பெண்ணும் உள்வாங்கிக் கொண்டு ஆணாதிக்கச் சிந்தனையை வெளிப்படுத்துகின்ற சூழலை உருவாக்கி ஆணாதிக்கச் சமூகம் வெற்றி கண்டுள்ளது. இது பல்வேறு சமூகச் சிக்கல்களுக்குக் காரணமாகவும் அமைகின்றது என்பதை நாம் ஒதுக்கித் தவிர்த்து விட்டுப் போக முடியாது. இத்தகையச் சூழலில் இந்த நூல் பல்வேறு முக்கியச் செய்திகளை உள்ளடக்கி வெளிவருகின்றது.

அதிகார குணம் கொண்ட பெண்தெய்வங்களை ஆணாதிக்கச் சிந்தனை எவ்வகையில் தாக்கி எதிர்கொள்கின்றது என்பதை முதல் கட்டுரை விவரிக்கின்றது. அப்பெண்தெய்வத்தின் பண்புகளைத் தாழ்த்தி ஆண்தெய்வங்கள் அவர்களை எதிர்கொண்டு தாக்கி நல்வழி படுத்துவதை புராணக்கதைகளின்

வழியாக மக்கள் சிந்தனையில் கொண்டு சேர்த்த தகவல்களை இக்கட்டுரை கூறுகிறது. காளி, லிலித் என்ற இரண்டு பெண் தெய்வங்களை இதற்கு நூலாசிரியர் மையக்கருத்தாக வைத்து தன் ஆய்வுப் பார்வையைச் செலுத்தி இருக்கின்றார்.

இரண்டாவது கட்டுரை பெண் பருவமடைதல், பூப்புக்குருதி, தாந்திரீக, மருத்துவ கருத்தாக்கங்கள் என்பதோடு பூப்புக்குருதியோடு தொடர்புடைய சமய நம்பிக்கைகளை ஆய்வுக்குட்படுத்துகிறது. நூலாசிரியர் விரிவாக பல்வேறு சமய நம்பிக்கைகளையும், அவற்றோடு இணைந்து வருகின்ற சடங்குகளையும் இப்பகுதியில் விவரிக்கின்றார். புராணக்கதைகள் பூப்புக்குருதியை கையாளும் வகையும் மூடநம்பிக்கைகளைச் சமய சடங்குகளாக அவை ஒன்றிணைத்திருக்கும் நிலையையும் ஆழமாக இப்பகுதி விளக்குகின்றது.

குழந்தை வெளிவருகின்ற பெண் உறுப்பின் வடிவம், தாந்திரீக முறைகள் மட்டுமன்றி உலகளாவிய நிலையில் பண்டைய வழிபாட்டுக் குறியீடுகளில் மிக முக்கியத்துவம் பெறும் ஒரு குறியீடாகக் கருதப்பட்டது. அதனை விளக்கும் வகையில் இந்த நூலின் 3வது கட்டுரை அமைகின்றது. பெண் உறுப்பை உருவகப்படுத்தும் குறியீடுகள், லிங்கமும் ஆவுடையாரும் இணைந்த வகையான அமைப்பு, அதன் வரலாறு, பல்வேறு

இனக்குழுக்களில் பெண் உறுப்பு தொடர்பான புராணக் கதைகள் ஆகியவை இக்கட்டுரையில் வழங்கப்பட்டுள்ளன. இது பெண் உறுப்பை மனித இனம் அச்சத்தோடும் வியப்போடும் காண்கின்ற மனப்போக்கை வெளிப்படுத்துகின்றது. இவற்றோடு குமரி வழிபாடு, இளம் பெண்கள் அதிலும் குறிப்பாக பெண் உறுப்பை தெய்வமாகப் பூசித்து வழிபடும் மரபுகள் பற்றியும் இக்கட்டுரை அலசுகிறது.

நூலின் இறுதிக் கட்டுரை வட இந்திய கருக்காத்தம்மன் என்ற தெய்வத்தைப் பற்றி விவரிக்கிறது. பார்வதி, தேவயானை போன்ற தெய்வங்களுடனான ஒப்பீடுகள், குழந்தைப் பேற்றிற்காகச் செய்யப்படும் பூசைகள் என்பது பற்றி இந்த இறுதிக் கட்டுரை விவரிக்கின்றது.


பொதுவாகவே வெளிப்படையாகப் பேசத்தயங்கும், ஆனால் பண்பாட்டுச் சூழலில் பெரும்பாலும் மறைமுகமாகவும் சில வேளைகளில் நேரடியாகவும் நிகழ்த்தப்படுகின்ற பல்வேறு சடங்குகளை இந்த நூல் பண்பாட்டு மானுடவியல் பார்வையில் அலசுகிறது. வெவ்வேறு பண்பாடுகளில் பெண் உடல், குறிப்பாக பெண் உறுப்பு, பாலியல் கூறுகள் என்பவற்றை நூல் ஆராய்கின்றது என்பதோடு பெண்ணைச் சிறுமைப்படுத்தவும் பெண்ணின் ஆளுமையைக் குறைக்கவும் ஆணாதிக்கத்தை

மேலெழச் செய்யவும் புராணக் கதைகள் முக்கியக் கருவிகளாகச் செயல்பட்டன என்பதை இந்நூல் வெளிச்சப் படுத்துகின்றது. நூலாசிரியர் முனைவர் ராஜேஸ்வரி அவர்களின் இந்த சிறந்த ஆய்விற்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். மானுடவியல் பார்வையில் மேலும் பல நூல்களை ஆசிரியர் படைக்க வேண்டும்.

நல்வாழ்த்துகள்.

முனைவர்.க. சுபாஷிணி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை
பன்னாட்டு அமைப்பு
30.1.2022





நூலாசிரியர் பற்றி



முனைவர் செ. இராஜேஸ்வரி ***கடந்த 3 ஆண்டுகளில் எழுதியும், மொழிபெயர்த்தும் வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை 71 ஆகும். அவை மொழிபெயர்ப்பு, சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்கள், கவிதைத் திறனாய்வு நூல்கள் எம்ஜிஆர் திரைப்பட ஆராய்ச்சி நூல்கள், Sangam Classics in English என்று பல தரப்பட்டவையாகும். Love Thamizh என்ற பெயரில் மாதந்தோறும் வரும் பன்மொழி மின்னிதழின் ஆசிரியர். எம்.ஜி.ஆர். மற்றும் கடவுளர் குறித்துப் பல காணொளிகளை வெளியிட்டுள்ளார்.***

இவர் ஒரு மொழிபெயர்ப்பாளர், மொழியியலார், எழுத்தாளர், எம்ஜிஆர் திரைப்பட ஆய்வாளர், கல்லூரிப் பேராசிரியர், சமயப் பண்பாட்டு ஆய்வாளர், மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate Editor] *பணியாற்றினார். ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார்.*

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறைதிரு இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி **ஸ்ரீ***மத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.*

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். வெளி நாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ்

ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாடநூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாடநூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாடநூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100" என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். தற்போது வெற்றித் திருமகன்

என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் இருபத்தோர் நூல்கள் வெளிவந்துள்ளன.

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ்விரும்பி அவர்களின் எட்டு கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகமும், ஆஸ்திரேலியாவின் மூன்ஸ்டோன் பதிப்பகமும் வெளியிட்டுள்ளன.

ஆங்கிலக் கவிதைத் தொகுதிகளைத் தமிழிலும், சங்கத்தமிழ்ப் பாடல்களை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ்விரும்பி அவர்களின் நூல்களின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றை நான்கு **கவிதைத் திறனாய்வு நூல்களாக** வெளியிட்டார்.

சமூக பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மேனாள் தலைவர் பேரா. முனைவர் ஞானசேகரனின் ஐந்து நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவற்றில் முதல் மூன்று நூல்களை மூன்ஸ்டோன் பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு மற்றும் ஆய்வு நூல் வரிசையில் இவர் ஐந்து நூல்களை எழுதியுள்ளார். முதல் நூலை நெருஞ்சி இலக்கிய இயக்கமும் மற்ற நூல்களை, சந்திரோதயம் பதிப்பகமும் வெளியிட்டது.

இவர் **Love Thamizh** என்கிற பன்மொழி மின்னிதழின் ஆசிரியர். இவ்விதழில் தமிழ் மொழி, வரலாறு, பண்பாடு குறித்த ஆங்கிலக் கட்டுரைகளை வெளியிடுகிறார். தமிழ் மற்றும் பிற மொழிகளுக்கு இடையில் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகளை இந்திய மற்றும் ஐரோப்பிய மொழிகளில் வெளியிடுகிறார்.

சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனிதநேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய சிறுகதைகள் ‘அமராவதியின் காதல்’ என்ற பெயரில் தொகுக்கப்பட்டு வெளிவந்தது. மாதமிரு முறை வரும் **ஆன்மீகம் இதழில்** (தினகரன் வெளி•யீடு) இவரது கட்டுரைகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

எம்.ஜிஆர். பற்றிய நூல்கள்

1. *வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 21 நூல்கள்.*

2. *சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும்*

மொழிபெயர்ப்பு நூல்கள்

ஆங்கிலம் ~ தமிழ் (9)

3. Indian Women-Changes and Challenges (**இந்திய பெண்கள் - சாதனைகளும் சவால்களும்)**

4. The Globalisation : An Urban Theology **(உலகமயமாக்குதலும் நகரிய இறையியலும்)**

5. Water Privatisation (for PET, Madurai) (**தண்ணீர் தனியார் மயமாக்கல்)**

6. Assisted reproductive technologies and its Impact on Women (SIRD, Madurai)

7. Eco Vision and Mission

8. Bachelor's Study Materials for Social Science [IGNOU, Madurai]

* Foreign News Kamalam Info

* News, P. Gurus.com

* Articles on Eye Care, Aravind Eye Hospital, Madurai

தமிழ் ~ ஆங்கிலம்

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் (9)

9. Shade of the Flowering Tree
10. Songs of Dryness
11. Speaking with You
12. Therapist of the Finest Art
13. Language of Love
14. A Lady at the little gate
15. Honey Hive
16. Ambrosial Kiss (Editor)
17. Following Dusty Feet (in print)

பேரா. முனைவர் ஞானசேகரனின் நூல்கள் (6)

18. Emerging Mallarism
19. Festival of lord Indra
20. Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam)
21. Re-reading of Pallu literature
22. Mallariyan Literature
23. Frontyard without My Dad (Poem)

மொழிப் பாடநூல் (2)

24. Easy English
25. Tamil for Non-Tamils

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள் (9)

26. *பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு*

27. *பெண் தெய்வ வழிபாடு*

28. *தேவேந்திரன்*

29. *மருதநிலப் பெண் தெய்வங்கள்*

30. *இருநிலத்தில் திருமுருகன்*

31. *முன்னோர் வழிபாடு*

32. *வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*

33. *யானைக் கடவுள்*

34. *பெண் பூப்பின் புனித வழிபாடு*

கவிதைத் திறனாய்வு நூல்கள் (5)

35. *பாடுபொருளும் பாசப்பொருளும்*

36. *பூ மர நிழலின் களமும் காலமும்*

37. *“2020 தைமாதத்தில் இன்று” கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*

38. *கவிதையில் காதல்*

39. *கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் (3)

40. *மொழிபெயர்ப்பியல் ஆய்வு*

41. *கவிதை மொழிபெயர்ப்பு*

42. *நவீன மொழிபெயர்ப்பு உத்திகள்* (Co-author)

ஆங்கிலக் கவிதை மொழிபெயர்ப்புகள் (5)

43. எட்டுத்திக்கும் செல்வீர்

44. அவன் கடவுளுக்கு நிகரானவன்

45. செக்கச் சிவந்த ரோஜா

46. கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"

47. கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"

புனைவிலக்கியம் (2)

48. அமராவதியின் காதல் (சிறுகதைகள்)

49. ரோஜா மொட்டு (கவிதைச் சித்திரங்கள்)

Sangam classics in English (Selected poems) (3)

50. Ainkurunuuru

51. Kurunthokai

52. Puranaanuuru

விருதுகள்

1. *சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது- நெருஞ்சி இலக்கிய இயக்கம், தஞ்சை*

2. பெண் சாதனையாளர் விருது, லேடி டோக் கல்லூரி, மதுரை

3. இலக்கிய விருது, திருப்பூர் முத்தமிழ் சங்கம்

உள்ளடக்கம்



தாமரை (சீனா)

1. துடியான தெய்வங்கள் லிலித்-காளி-இடாகினி

லிலித் காளி, இடாகினி போன்ற துடியான, அதிகார குணம் படைத்த பெண் தெய்வங்கள் காலப்போக்கில் ஆணாதிக்கச் சமயவாதிகளால் மாற்றப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்ததை இக்கட்டுரை விளக்குகிறது. முதலில் காளி அடங்காதவள்; அவள் ஆண்களைக் கருவறுப்பாள்; தண்டிப்பாள்; ஆணுக்கு அடங்கமாட்டாள்; ஆண் வாடை அறியாதவள் ஆணை வெறுப்பவள். என்றனர். பின்பு அவளைச் சாத்வீகப்படுத்தி தேவி என்றும் சக்தி என்றும் மாற்றினர்.

இருபது இருபத்தியோராம் நுற்றாண்டுகளில் பெண்ணிலைவாதிகள் லிலித் மற்றும் காளியைப் பெண்ணின் பெரும்சக்தியாக அதீத ஆற்றலின் வடிவாகக் கண்டனர். நவீன தாந்திரிகர்கள்

தாந்திரிகம் உணர்த்தும் பாலுறவு பெண்களின் உடல் நலத்துக்கு இன்றியமையாதது என்று பிரச்சாரம் செய்கின்றனர். பாலுறவு என்பது பாவம் என்ற கருத்து தற்போது முறியடிக்கப்படுகிறது. லிலித், காளி போன்ற பெண்ணாதிக்கக் கருத்தியல் அன்று முதல் இன்று வரைப் பெண்ணின் அளப்பரிய ஆற்றலாகவே புரிந்து கொள்ளப் பட்டுள்ளது.

டாகினி அல்லது இடாகினி என்ற பெயர் ஆரம்பத்தில் பவுத்த சமயத்தில் யோக சித்தி பெற்ற பெண்ணுக்குக் கிடைத்த சிறப்புப்



பெயராக இருந்தது. காலப்போக்கில் இதுவும் பேய் என்று மாற்றப்பட்டது. தொடக்கத்தில் இடாகினி யோகினியரில் சிறந்தவளாகக் கருதப்பட்டாள் இவளும் சுடுகாட்டில் திரிபவள்; அரையாடை உடுத்தியவள்; பிணங்களைத் தோண்டி எடுத்துத் தின்பவள். எரியும் சிதையில் இருந்து பிணத்தின் தசையைப் பிய்த்துத் தின்பாள்.

காளியின் மெய்க்காப்பாளராக விளங்கிய சாதகர்களுடன் இடாகினியும் இருப்பதாகத் தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இடாகினியைத் தமிழ் இலக்கியங்கள் “இடாகினிப்பேய்” என்று அழைத்தன. காளி மற்றும் இடாகினியைப்போல லிலித் என்ற பெண் தேவதை தொடக்கத்தில் வரலாற்றில் தவறாகச் சித்திரிக்கப்பட்டாள். ஆண்களைக் கொல்பவள் என்றும் குழந்தைகளை அழிப்பவள் என்றும் இவளைப்பற்றி கதைகள் பரப்பப்பட்டன. இம்மூவருக்கும் இடையில் பல ஒற்றுமைகளைக் காணலாம்.

மறைக்கப்பட்ட வரலாறு

உலகச் சமய வரலாற்றில் லிலித் என்ற பெயருடைய ஆதிக்கப் பெண் தேவதை மறைக்கப்பட்டது. லிலித் ஆதாமுடன் சேர்த்து

ஆண்டவனால் படைக்கப் பட்டவள். ஆதாமின் விலா எலும்பை எடுத்துப் படைக்கப்பட்டவள் அல்ல. மண் தூசில் இருந்துப் படைக்கப்பட்டவள். இந்நிலையில் அவள் பாலுறவின் போது ஆதாம் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பினாள். ஆனால் அதற்கு ஆதாம் ஒப்புக்கொள்ளவில்லை. அவன் அவளை வெறுத்தான் விரட்டிவிட்டான். ஆண்டவனிடம் முறையிட்டு அவளைத் தன் வாழ்வில் இருந்து அகற்றினான். பிறகு ஆண்டவர் ஆதாமின் விலா எலும்பில் இருந்து ஏவாளைப் படைத்துக் கொடுத்தார். அவள் அவனுடன் கூடிப் பிள்ளை பெற்றாள். விலக்கப்பட்ட கனியை அவனையும் உண்ண வைத்து ஜென்மப் பாவத்தில் அவனையும் சேர்த்துக் கொண்டாள். இதனால் ஆண்டவர் அவர்களைச் சபித்தாலும் ஆதாமால் அவளை வெறுக்க முடியவில்லை. லிலித் வரலாறு திருமறையில் இருந்து திட்டமிட்டு மறைக்கப்பட்டது.

பிற்காலத்தில் லிலித் பற்றிச் சில கதைகள் உருவாகின. லிலித் சாத்தானைத் திருமணம் செய்து கொண்டதாகச் சொல்லப்பட்டது. இக்கதை காலத்தால் பிந்தியது. அவளைத் தீயவள் என்று நம்ப வைப்பதற்கான முயற்சி இது. இவள் மேலாதிக்க நிலையில் இருந்து ஆதாமுடன் இணைந்து பிள்ளைகள் பெற்றதால்



ஆதாம் வலுக் குறைந்தவன் ஆனான். பிள்ளைகள் பெற்றதும் லிலித் கூடுதல் வலிமை பெற்றாள். ஆதாம் வலிமை குன்றினான் என்பதால் அவன் லிலித்தை வெறுத்தான். ஆண் ஆதிக்கவாதிகள் அவளைப் பேய், சாத்தானுக்கு வாழ்க்கைப்பட்டவள் மோக வெறி பிடித்தவள், குழந்தையைக் கொன்று தின்பவள் என்று பல கதைகளை உருவாக்கி அனைவரும் அவளை வெறுக்கும்படி செய்தனர்.

இந்தியப் புராணங்களில் காளி சிவன் மீதேறி அமர்ந்து அவனை உறவாடிக் கொல்வாள். ராஜயோக சாதனையில் ராஜயோகினி ஆண் மீதமர்ந்து யோகப் பயிற்சி செய்யும்போது அந்த ஆண் சாகும் வாய்ப்புண்டு. சும்பன் விசும்பனைக் கொல்ல காளி மயக்கும் மோகினியாக வந்து அவர்களை மயக்கிக் கொல்வாள். பவுத்த சமயத்தில் யட்சி என்பவள் ஆண்களை மயக்கிக் கொல்வாள் என்ற நம்பிக்கை நிலவுகிறது. ஆக லிலித் என்பவள்

ஒரு பெண் அல்ல. ஒரு கருத்தாக்கம். அவள் உலகெங்கும் பல பெயர்களில் காணப்படுகின்றாள்.

ஆணாதிக்கச் சமுதாயம் தோன்றிய பிறகு பெண் இரண்டாம் பட்சக் குடிமகளாகக் கருதப்பட்ட காலத்தில் பெண்ணின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டது. அவள் பிள்ளை பெறும் இயந்திரமாக மட்டும் கருதப்பட்டாள். வீட்டு வேலை செய்யும் வேலைக்காரியாகவும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் ஆயாவாகவும் குழந்தைகளுக்காகவும் தன் கணவனுக்காகவும் தன்னுடைய சுகங்களைத் தியாகம் செய்யும் தியாகத் தாயாகவும் வாழும்படி கட்டாயப் படுத்தப்பட்டாள். இவையே சிறந்த பண்புகள் என்று சமுதாயம் அவள் மீது திணித்து அவளைத் தன்னைப் பற்றி தன்னுடைய நலன்கள் மற்றும் சுகங்களைப் பற்றிச் சிறிதும் நினைத்துப் பார்க்காமல் இருக்க அவளைக் குடும்பக் கொத்தடிமையாக மாற்றியது. அதுவரை உலகச் சமயங்களில் தாய்த்தெய்வ வழிபாடு அல்லது பெண் தெய்வ வழிபாடு வழக்கில் இருந்தது. ஆணாதிக்கம் தோன்றிய பிறகு உலகச் சமயங்களில் ஆண் தெய்வம் ஆதிக்கத் தெய்வமாக நடைமுறைக்கு வந்தது.

அல்லது புகுத்தப்பட்டது. கிரேக்கப் பெண் தெய்வங்களில் இன்னானா, இஷ்டார், டயானா போன்ற துடியான தேவதைகள் காலப்போக்கில் குழந்தைப்பேறு, விவசாயம் தொடர்பான வளமைத் தெய்வங்களாக மாற்றப்பட்டன.

பெண் பாவத்தின் சின்னம்

குழந்தைப் பிறப்பு அல்லது மனிதப் பிறப்பு என்பது பாவமாக அல்லது பாவத்தின் விளைவாகக் கருதப்பட்டது. பாலுறவு என்பது பாவச் செயலாகக் கருதப்பட்டது. பாலுறவுக்கான தூண்டுதல் பெண் பிறவி என்ற கருத்து பரப்பப்பட்டது. எனவே பெண்ணும் பாவத்தின் சின்னமாகக் கருதப்பட்டாள். சமயங்கள் பெண் பிறவி மோட்சத்துக்குச் செல்ல முடியாது. அவள் மீண்டும் ஆண் பிறப்பு எடுத்துத் தான் மோட்சத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் விதைக்கப்பட்டது. இவ்வாறு பெண் அடிமைத்தனம் மனித வரலாற்றில் வளர்ந்து கொண்டிருந்த போது அதனுடைய பிரதிபலிப்பு உலகச் சமய வரலாற்றிலும் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. இதன் முக்கிய சான்றாகத் திகழ்பவள் லிலித்.

லிலித்தை மேலாதிக்க நிலை

லிலித் ஆதாமுடன் உறவு கொண்டபோது மேலாதிக்க நிலையை விரும்பியதால் அவளை அவன் புறக்கணித்ததாக ஒரு காரணம் சொல்லப்பட்டாலும் அதனைத் தொடர்ந்து அவள் குழந்தைகள் பெற்ற போது அவள் குழந்தைகளை ஆண்டவர் தினமும் நூறு வீதம் கொல்ல உத்தரவிட்டார். இதனால் லிலித் மேலும் பல ஆண்கள் மூலமாக நூற்றுக்கும்




மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருந்தாள். தன்னுடைய குழந்தைகளைக் கொல்ல உத்தரவிட்டவர்கள் மீது கடும் கோபமும் வன்மமும் கொண்டிருந்தாள். இந்தக் கோபமும் வன்மமும் இயற்கையானது என்பதைப் புரிந்து கொள்ளாத ஆண் சமூகம் அவளை இருட்டில் வாழ்பவள் என்றும் காமவெறி பிடித்தவள் என்றும் ஆண்களிடமிருந்து அவர்கள் அறியாமல் உறக்கத்திலேயே உயிர் அணுக்களை எடுத்துத் தான் கருவுற்றுக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருப்பாள் என்றும் குற்றம் சுமத்தியது.

அவளை மோகினிப் பிசாசு போல உருவகித்தது. மேலும் இவள் பிள்ளை திண்ணி ராக்கச்சி இடாகினி, சஷ்தி போல கருத்தாக்கம் செய்யப்பட்டாள். இவள் பிள்ளைகளைக் கொன்று தின்று விடுவாள். கருவில் இருக்கும் குழந்தையை அழித்துவிடுவாள். பிறந்த குழந்தைக்கு நோய் கொடுத்துக் கொல்வாள் என்று இவளைப் பற்றி மிகவும் பயங்கரமான கருத்தாக்கங்கள் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன. சஷ்தி, இடாகினி, பிடாரி போன்றவர்களுக்கும் இதே கதை தான்.

ஆண்களையும் குழந்தைகளையும் கொல்பவள்

லிலித் என்ற கருத்தாக்கம் மேனாட்டுக் கிறித்துவ, யூத சமயங்களில் மட்டுமின்றி கீழைச் சமயங்களிலும் இருந்தது. இடாகினி என்பவள் சுடு காட்டில் வசிக்கும் பெண் பேய் அவள் குழந்தையைப் பறித்துச் சென்று விடுவாள் என்ற கதை மணிமேகலையில் காணப்படுகிறது. பிடாரி என்பவள் சுடுகாட்டில் கோயில் கொண்டிருக்கும் தெய்வம் அவளும் குழந்தைகளைக் கொன்று விடுவாள் எனவே அவளுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடத்திக் குழந்தைகளின் மீது கருணை காட்டும்படி வேண்டிக் கொள்ள வேண்டும் என்று கதைகள்



தோன்றின. இப்பெண் தெய்வங்கள் ஆண்களை மயக்கிப் பாலுறவு கொள்ளும். பின்னர் அவர்களைக் கொன்று விடும் என்ற நாட்டுப்புறக் கதைகளும் உருவாகின. யட்சி, மோகினிப் பிசாசு போன்றவைகளை பெண் பிசாசுகள் என்று குறிப்பிடும் வழக்கம் இருந்தது. இவர்களுக்கு ஆணின் மீது உண்டாகும் வெறுப்பை உளவியலார் *penis envy* என்றனர். ஆனால் இக் கதைகளில் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்ற ஒரு விஷயத்தைக் கருத்தில் கொண்டால் அது குழந்தைப்பேறு பற்றியதாகும். லிலித் பெற்ற குழந்தைகளை ஆண்டவர் கொன்றார். அதனால் இவள் வன்மம் கொண்டு மனிதர்கள் பெற்ற குழந்தைகளைக் கொன்றாள். தன்னுடைய குழந்தைகளைக் கொன்ற காரணத்தினால் தான் அவள் மற்றவருடைய குழந்தைகளைக் கொல்கிறாள், என்ற கருத்தைப் புரிந்து கொள்ளாமல் இவள் ஆண்களின் உயிரணுக்களை உறிஞ்சிச் சாகடிப்பவள். பிறந்த குழந்தைகளைக் கொல்பவள் என்று இவளை ஆணுக்கும் பெண்ணுக்கும் எதிரியாக்கிக் காட்டிய வரலாறு ஆண் ஆதிக்கச் சிந்தனையை வலுப்படுத்துகிறது. இச்சிந்தனை பெண் என்பவள் ஆணுக்கு அடங்கி இருக்க வேண்டும். அவளுக்கென்று தனிப்பட்ட ஆசைகள் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவதாகும்.

கீழை நாடுகளில் மோகினிப் பிசாசு, அமுக்குப் பிசாசு, நீலி போன்றவை ஆணுக்கு எதிரானவை என்ற கதைகள் உலவுகின்றன. இவை காம இச்சை கொண்டவை என்ற நம்பிக்கையும் பரப்பபப்பட்டது. அதுபோல லிலித் ஆண்கள் உறங்கும்போது அவர்களின் கனவில் வந்து பழகி அவர்களைக் கிளர்ச்சியுறச் செய்து அப்போது வெளியே வரும் உயிரணுக்களைத் திருடி எடுத்துச் சென்று பிள்ளை பெற்று விடுவாள். எனவே ஆண்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். தங்களுடைய உயிரணுக்கள் வெளியே சிந்தி விடாமல் பாதுகாக்க வேண்டும். இது சமயம் ஆண்களுக்கு இட்ட கட்டளை ஆகும். ஆண்களின் தனிப்பட்ட ஒழுக்கத்தை வலியுறுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் ஒழுக்க விதி என்று கொண்டாலும் கூட பிசாசு என்ற கருத்தாக்கம் பெண்களின் மீதான வெறுப்பைக் காட்டுகிறது.

லிலித் வசிப்பிடம்

லிலித் மரங்களில் வசிப்பவள் என்றும் பாம்பு உருவில் தெரிபவள் என்றும் ஜு பறவையாகப் பறந்து தெரிவாள் என்றும் இடைக்காலத்தில் இவளுடைய வரலாறு வளர்ந்து கொண்டே போனது. லிலித் ரோம்



நாட்டில் லாமியா என்று அழைக்கப்பட்டாள். அரேபியா நாட்டில் கரீனா எனப்பட்டாள்.

கண் என்னும் குறியீடு

கிரேக்கத்தில் ஜீயஸ் என்பவன் கடவுளர்களின் தலைவர். லிலித் இரவு முழுவதும் கண் விழித்து இருப்பதால் ஆண்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்றாள் என்று கருதி இவளுடைய உறக்கமின்மை என்ற நிலையை மாற்ற இவள் கண்களை இவளே பிடுங்கித் தன் கையில் வைத்துக் கொள்ளலாம் என்று ஜீயஸ் ஒரு வரம் அருளினார்.

ஜியஸ் லிலித்துக்குக் கொடுத்த வரத்தில் கண் என்ற கருத்தாக்கம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இவள் இரவில் கண் விழித்து ஆண்களின் கனவுகளில் புகுந்து உயிரணுக்களைத் திருடிச் செல்கின்றாள். இதன் குறியீட்டுப் பொருளை உணர்வதற்கு இந்திரனுடைய வரலாறு உதவுகின்றது. ஆண்மையின் வடிவாக இந்திரன் விளங்கினான். தேவலோகத்தில் தேவர்கள் பிறக்க இந்திராணிக்கு இந்திரிய தானம் செய்த இந்திரனை ஒரு காலத்தில் இந்தியா முழுக்க எல்லோரும் போற்றினர்.

பௌத்த சமயம் செல்வாக்கிழந்து வைதீகச் சமயங்கள் செல்வாக்குப் பெற்ற பிறகு பக்தி இயக்கக் காலத்தில் இந்திரன் போகியாகக் கருதப்பட்டு அவன் உடலெங்கும் கண்கள் தோன்றியதாக ஒரு கதை உருவானது. இதனால் இவன் சஹஸ்ர நேத்ரன் அதாவது ஆயிரம் கண்ணன் என்றும் அழைக்கப்பட்டான். அவனுடைய பெண் மோகம் கண்டு சபித்த முனிவர் அவனுடைய உடம்பெங்கும் அவன் ஆசைப்பட்ட பெண் குறிகள் தோன்றும்படி செய்தார். பின்பு அவன் அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதனால் அந்தப் பெண் குறிகளை மற்றவர் கண்களுக்கு மட்டும் கண்களாகத் தெரியும்படி மாற்றினார். அவனுக்கு மட்டும் அது பெண்ணுறுப்பாகவே தெரியும்

என்றார். இக்கதையில் கண் என்பது ஒரு குறியீடாக விளங்குவதை அறியலாம். இக்கதையில் கண் என்பது பெண்ணுறுப்புக்கு மாற்றாகப் பதிலியாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்திரன் சாபத்தோடு லிலித்தின் வரத்தை ஒப்பு நோக்கினால் முற்காலத்தில் கண் என்பது பெண்ணுறுப்பின் குறியீடாக விளங்கியதாகக் கருத இடமுண்டு. லிலித் கதையில் அவளுடைய கண்கள் கழற்றப்பட்டு அவள் கைகளில் வைத்துக் கொள்ளும் வரம் பெற்றாள் என்பது அவளுடைய பெண்ணுறுப்பு இரவு நேரத்தில் செயல்படாமல் போகும் என்பதற்கான குறியீடாக உள்ளது. இரவில் அவள் செயல்படக் கூடாது என்பதே இக்கதை உருவாக்கப்பட்டதன் நோக்கம் ஆகும். இக்கதையின் மூலமாக இவளுடைய வன்மமும் இவளுடைய வேகமும் பிறகாலத்தில் குறைக்கப் பட்டது. கிரேக்கக் கதைகளில் லிலித் செயல்படாத பெண் சிங்கமாக மாறிப் போனாள்.

யூதர்களின் லிலித்

யூதர்கள் லிலித்தை இன்றும் அழகான பெண்ணாகக் கருதுகின்றனர். முடி நீளமாக இருக்கும் பெண்கள் பாலியல் இச்சை அதிகம் கொண்டவர்கள் என்ற நம்பிக்கை யூதர்கள் மத்தியில் இருக்கின்றது. அவர்கள் லிலித்

ஓவியத்தை வரையும் போது நீண்ட கூந்தல் உடையவளாக அவளை வரைகின்றனர். மேலும் கண்ணாடி பார்க்கும் பெண் காம இச்சை கொண்டவள் என்ற ஒரு எண்ணமும், அவர்களிடையே இருப்பதால் அவள் கண்ணாடி முன் நின்று தன் அழகை ரசிக்கின்றவள் என்றும் அவளுடைய உருவத்தை வரைகின்றனர்.

மனிதனாகப் பிறப்பது பாவம் என்றும் என்று கீழைநாட்டு மதங்கள் போதித்தன. மனிதப் பிறப்பு என்பது பாவத்தின் விளைவு என்றன, அவன் பிறப்பிலேயே அந்த ஜென்மப் பாவம் ஒட்டிக்கொள்கிறது என்று மேலைநாட்டு மதங்கள் போதிக்கத் தொடங்கிய காலத்தில்



துடிப்பான பெண் தெய்வங்கள் பாவத்தின் சின்னங்களாகக் கருதப்பட்டனர். இன்று அனைத்துச் சமயங்களும் பிறப்பறுத்தல் தங்களுடைய வேண்டுதலாக இருக்க வேண்டும் என்கிறது. பிறவாமை வேண்டும் என்பது இந்துக்களின் இறை வேண்டுதலாக இருக்கிறது.

கிறிஸ்துவத்தில் பாலுறவு மற்றும் குழந்தைப் பேறு தொடர்பான ஆதித் தாயான லிலித் பாவங்களின் ஊற்றுக்கண்ணாகச் சித்திரிக்கப்பட்டாள். இதனால் இவளைப் பற்றிய தகவல்கள் கிறிஸ்தவத் திருமறையில் இடம்பெறாமல் போயிற்று.

மனிதர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு வேண்டிய சமூகக் கருத்துக்களைத் தாம் தொகுத்த மறை நூலில் இடம்பெறச் செய்தனர். லிலித் ஒரு பெண் பேய் என்ற வகையில் ஏசாயா அதிகாரத்தில் மட்டும் குறிப்பிடப்படுகின்றாள். வேறு எங்கும் லிலித் பற்றிய தகவல்கள் இல்லை. ஆனால் யூதர்களிடம் ஆதாமின் முதல் மனைவி லிலித் என்ற கதை உள்ளது.

கலைப்படைப்புகளில் லிலித்

பிற்காலத்தில் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த கவிஞர்கள் லிலித் பற்றி நிறைய கவிதைகள் எழுதியுள்ளனர். **எடுத்துக்காட்டு:**

I was created from the earth
Just like him but before him
The first woman the first wife I am
As equal I didn't bow before him.

On wings of storm on mist of sea I ran
But the Three were sent to catch me
'Drown me in the water if you can!'
But they didn't dare to test me.

My skin is like the avid moon
My hair the crawling snakes of fire
Only death spreads from my womb
On your tomb I will carve desire. - Marton Dezso

அவளைப் பெண்ணியவாதியாகக் கருதி தங்களுடைய படைப்புகளில் அவளைக் குறிப்பிடுகின்றனர். பெண் கவிஞர் மாயா ஏஞ்சலோ ஏவாள் ஷீபா, லிலித் ஆகிய மூவரையும் ஒரே வரிசையில் வைத்துத் தன்னுடைய கவிதையில் குறிப்பிட்டுள்ளார். மற்றவர்களும் லிலித்தின் பண்புகளைப் பலவாறாக அடுக்குகின்றனர். சான்று

The Rose
the Witch
the Poppy

the Serpent

the Weaver

the Succubus

the First Wife

the Demoness

the First Womyn

the Screech Owl

the Enchantress

the Wild Womyn

the Triple Goddess

the Scarlet Womyn

the Sacred Feminine

the Red Haired Seductress

the Guardian of Womyn's Mysteries

the Beginning and the End


the Queen of the Night


the Mother of Demons

the Dark Goddess


the Shekinah

Lilith





மேலைநாடுகளில் பயன்படுத்திய ஆவுடை வடிவத் தாயத்து



மேலைநாடுகளில் வழங்கி வந்த பெண் உறுப்புச் சின்னங்கள்

இக்காலகட்டத்தில் மேலை நாட்டில் திரைப்படங்களில், தொலைக்காட்சித் தொடர்களில், லிலித்தை ஒரு வில்லியாகப் படைக்கின்றனர். வில்லியாக மந்திரவாதியாக கொலைகாரியாக நடிக்கும் பெண்களுக்கு லிலித் என்று கதாபாத்திரப் பெயர் சூட்டுகின்றனர்.

காளி

காளியைப் பச்சைக் காளி என்றும் பவளக்காளி என்றும் கருங்காளி என்றும் பல வண்ணங்களில் காண்கிறோம். பெரும்பாலும்



மடப்புரம் பச்சைக்காளி அம்மன் கோயில், மதுரை



தசரா பண்டிகையில் காளி வேடம் தரித்த பக்தை

பச்சைக் காளி என்பவள் மலையாளத்தில் இருந்து புறப்பட்டு வந்த காளியாக நம்பப்படுகிறாள். பச்சைக்காளி பவளக் காளியைக் குலசேகரப் பட்டினத்தில் நடக்கும் முத்தாரம்மன் கோவிலின் தசரா பண்டிகையின் போது பக்தர்கள் ஆடும் ஆட்டத்தில் காணலாம். இவ் ஆட்டம் ஒரு கலைத் தொன்மம் ஆகும். மதுரை அருகே மடப்புரத்தில் இருக்கும் பச்சைக்காளி மலையாளத்தில் இருந்து தென் தமிழ் நாட்டுக்குள் புகுந்து பின்பு மதுரை மீனாட்சியால் தமது எல்லைப் பகுதிக்குள் நுழையக் கூடாது என்று தடுக்கப்பட்டவள்.

காளி – ஒரு வரலாற்றுப் பதிவு

காளியை அசுரத்தனம் உடையவள் அல்லது கொடூரமானவள் என்று புரிந்து கொள்வதைவிட ஒரு காலகட்டத்திய பெண்மக்கள் கொண்டிருந்த ஆதிக்கத்தின் ஓர் அடையாளம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

காளி மனித குல வரலாற்றின் வேட்டைச் சமூகத்தின் வரலாற்றுப் பதிவாக உலகெங்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறாள். அக் காலகட்டத்தில் வலிமை மிக்க பெண் தலைமையில் ஆண்கள் அவளுக்குப் பணிந்து குழுவாக இணைந்து வாழ்ந்தனர்.

மனித குல வரலாற்றில் வேளாண்மைச் சமுதாயம் உருவான போது ஆண் முதன்மைச் சமுதாயம் உருவெடுத்தது. அவள் பெண், மனைவி ஆனால், அவள் கணவனாகிய ஒருவனுக்கு மட்டுமே குழந்தை பெறும் பொறுப்பு உடையவள் ஆனாள். குழந்தைப்பேறு, குழந்தைப் பராமரிப்பு அவர்களுடைய சகல தேவைகளையும் கவனித்தல் போன்ற பணிகள் அதிகமாகிவிட்ட காரணத்தினால் குடும்பத் தலைவி என்ற பொறுப்பு மட்டுமே பெண்ணுக்குப் போதுமானதாகி விட்டது. வீடு அவளது ராஜ்ஜியமாகவும் குடும்பத்தினர் அவளது

பிரஜைகளாகவும் மாறிப்போயினர். இவளது வடிவமே தெய்வங்களில் பார்வதி ஆகிறது. பார்வதி தேவி ஒரு சராசரி பெண்ணைப் போலத் தாய், தங்கை, மகள் எனப் பல உறவுகளுக்கிடையே, உறவுச் சிக்கல்களுக்கு இடையே பின்னிக் கிடக்கிறாள். இவள் சாந்த சொரூபியாக தாயன்பு கொண்டவளாக தியாகத்தின் திருவுருவாக வாழவேண்டும் என்ற சமூக நியதிகளுக்கிடையே ஆட்பட்டு இயல்பு மாறிப் போகிறாள்.

கொலைத் தெய்வம்

ஒவ்வொரு தெய்வமும் ஒரு கோட்பாட்டினை அடிப்படையாகப் கொண்டுள்ளது. இக் கோட்பாட்டைப் புரிந்து கொண்டால் அதன் உருவாக்கத்தின் பின்னணியையும், தோற்றம், செயல்பாடு மற்றும் புராணக் கதைகளின் சாராம்சத்தையும் தெளிவாக உணரலாம்.

காளி என்ற கொலைத் தெய்வம் அழிவுத் தெய்வம் ஆண்களை வெறுக்கும் தெய்வம். அனைத்து நாடுகளிலும் கொலைத்தெய்வமாக ஒரு பெண் தெய்வம் உண்டு. வட இந்திய மொழிகளும் ஐரோப்பிய மொழிகளும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்ற ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதால் காலி, காளி என்ற பெயர் அங்கு கேலே, காலே,

என உயிரொலி இடம் பெயர்தல் என்ற ஒரு மாற்றத்துடன் *(metathesis)* காணப்படுகிறது.


ஆண்களை அழிக்கும் காளி

லிலித்தைப் போலவே காளியும் ஆண்களை அழிக்கும் பெண்ணாக கருதப்பட்டாள். காளியின் உருவத்தைப் பார்த்தால் அவள் சிவனின் நெஞ்சின் மீது தன் காலை ஊன்றி நிற்கும் தோற்றத்தில் சிலைகளும் ஓவியங்களும் உண்டு. அவற்றில் காளி சிவனின் லிங்கத்தின் மீதமர்ந்து அவனது தலையை வெட்டிக் கையில் வைத்திருப்பாள். தனது ஆதிக்கத்தால் அவனை



அழித்து ஒடுக்கி விட்டாள் என்ற கருத்தை விளக்கும் படங்கள் இவை. அழிவின் கடவுள் என்பதிலும் குறிப்பாக ஆணை அழித்தல் என்பதும் காளியின் கருத்தாக்கத்தில் மிக முக்கியமானது.

ரியா க்ரோனியா ஆரம்பத்தில் இங்கே நாம் படங்களில் காணும் காளியைப்போல ஆண்களைக் ‘காயடித்துக்’ [ஆணுறுப்பை அறுத்து] கொன்றாள். அவள் கையில் வைத்திருந்த *scythe* என்ற அரிவாளால் வானத்தின் தந்தை கொல்லப்பட்டார் என்று கதைகள் கூறுகின்றன. பல புராணக் கதைகளில் சொல்லப்பட்ட மையக் கருத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான யார் பெரியவர் என்ற போராட்டம் ஆகும். காளிக்குச் சிவனைக் கொல்ல வேண்டும்; சிவனுக்குக் காளியின் அகங்காரத்தை அழிக்க வேண்டும். இந்நிலை பெண் முதன்மைச் சமுதாயம் முடிந்து ஆண் முதன்மைச் சமுதாயம் தோன்றிய போது



ஏற்பட்ட கால மாற்றத்தின் [transition period] போராட்டப் பதிவுகள் ஆகும்.

*செல்டிக் பழங்குடியினர் தங்கள் பிள்ளைகளைக் கொன்று தின்னும் பெண் தெய்வத்தை **ரியானோன்** என்று அழைத்தனர். இந்த ரியாவும் வானத்தின் தந்தை யுரேனசை காயடித்துக் கொன்றாள்.*

குழந்தைகளையும் கொல்லும் காளி

பெண் குழந்தைகளை பெற்றுக் தருகிறாள்; அவளே கொன்றும் விடுகிறாள் என்பது ஆக்கலும் அழித்தலும் அவளால் மட்டுமே நடக்கும் என்று வரலாற்றுக்கு முந்திய ஆதி காலத்தின் கருத்தியலை முன்வைத்தது. ஆனால் வேளாண் சமூகம் தோன்றியதும் பெற்றுத் தருவதும் பெனிக் காப்பதும் அவள் கடமைகள் ஆயின. அதனால் பண்டையக் கருத்தியல் மறைந்தது. லிலித்தைப்போலவே காளியும் குழந்தைகளையும் அழிப்பாள் என்ற கருத்து புகுத்தப்பட்டது. காளி தன் காதுகளில் தான் கொன்றழித்த குழந்தைகளைக் குண்டலங்களாகத் தொங்க விட்டிருப்பாள். தனது இனத்தைத் தானே அழிக்கும் கால தேவதை என்ற பொருளில் ரியாவை வணங்குகின்றனர். கோபம் வந்தால் நோய், வெள்ளம், நிலநடுக்கம் போன்றவற்றை

ஏற்படுத்திக் காளி தனது இனத்தைத் தானே அழித்துவிடுவாள் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கிறது. மக்கள் ஆயுட்காலத்தின் கணக்கை முடித்து வைக்கும் கால தேவதை இவள் என்ற கருத்தியல் உலகெங்கும் இருப்பதை அறிய முடிகிறது. ஆங்கிலத்தில் இவளை Cannibal mother என்றும் Goddess of Time என்றும் அழைக்கின்றனர்.

தென் தமிழகக் கிராமங்களில் பிள்ளை தின்னி இராக்கச்சி என்ற பெண் தெய்வம் உண்டு. இத்தெய்வத்தைக் கைகளில் பிள்ளைகளைத் தொங்க விட்டிருப்பதாகவும் மடியில் ஒரு பிள்ளையை மல்லாக்கப் போட்டிருப்பதாகவும் வடிவப்படுத்துவர். இராட்சசி என்ற பெயரின் திரிபு இராக்கச்சி என்பதாகும்.

பிள்ளை தின்னும் இடாகினி

லிலித் மற்றும் காளியைப் போல இடாகினியும் பிள்ளைகளைத் திண்பவள். சுடுகாட்டில் இருப்பவள். நிர்வாணமானவள் என்ற கருத்தாக்கம் பவுத்தத்தில் மற்றும் தமிழ் இலக்கியத்தில் நிலவியது.

சிலப்பதிகாரத்தில் மாலதி என்பவள் தனது கணவனின் இன்னொரு மனைவியின் குழந்தை அழுததைக் கண்டு தூக்கி எடுத்துப் பால் ஊட்டினாள்.



பூர்ண புஷ்கல சமேத அய்யனார் –
பாசண்டச் சாத்தன்

அந்தக் குழந்தை மூச்சுத் திணறி இறந்துவிட்டது. மாற்றாளோ இவளை ஏசினாள். ‘என் பிள்ளையை உயிருடன் கொண்டு வந்து தா’ என்றாள். மாலதி அக்குழந்தையுடன் சுடுகாட்டுக்கு வந்தாள். அங்கு இடாகினிப் பேய் வந்து அவளிடமிருந்து குழந்தையைப் பறித்துக் கொண்டு போயிற்று. அப்போது பாசண்டச் சாத்தன் எனும் தெய்வம் இடாகினியிடமிருந்து குழந்தையைப் பறித்து அதற்கு உயிருண்டாக்கிக் கொடுத்தது. கனாத் திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய்

'பாசண்டச் சாத்தற்கு பாடுகிடந்தா ளுக்கு

‘ஏசும்படி ஓர் இளங்கொடியாய் ஆசிலாய்

செய்தவம் இல்லோருக்குத் தேவர்
வரம்கொடார்;

பொய்யுரையே அன்று; பொருள்உரையே
கையில்

படுபிணம் தா' என்று பறித்தவள்
கைக்கொண்டு

சுடுகாட்டுக்
கோட்டத்துத்தூங்கிருளில்சென்றாங்கு

இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி

மடியகத்து இட்டாள் மகவை''

என்ற அடிகளில் இடாகினி என்பவள் ஒரு பிணம் தின்னிப் பேய் என்பது தெளிவாகிறது.

கலிங்கத்துப் பரணியில் போருக்குச் சென்ற கணவன் திரும்பி வராததால் அவனைத் தேடிக்கொண்டு போர்க்களத்துக்கு வந்த அவனது மனைவி இடாகினியிடம் என் கணவனைப் பார்த்தாயா என்று கேட்கிறாள்.

தங்கணவருடன் தாமும் போக வென்றே

சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்

எங்கணவர் கிடந்த இடம் எங்கே என்றறிந்து

இடாகினியைக் கேட்பாரைக் காண்மின்
காண்மின்

என்ற பாடல் சாதகர் மற்றும் இடாகினி பற்றி குறிப்பிடுகிறது.

இடாகினி பெண்ணா? பேயா?

டாகினி என்ற யோகினி பவுத்த சமயத்தின் தெய்வம் ஆனாள். இவள் அனைத்து யோக சித்தியும் பெற்றவள் என்பதால் வேண்டிய உருவை எடுக்க முடியும். அவள் பெண் உருவில் வந்து தோன்றுவாள்; அதுவே அவளது இயல்பு. அவளால் வேறு உருவம் எடுத்துச்



செயல்படவும் வான் வெளியில் பயணிக்கவும் [sky goer] முடியும், என்று Dakini - Some comments on its Nature and Meaning என்ற கட்டுரையை எழுதிய ஜென் வில்லியம்ஸ் தெரிவிக்கிறார். இடாகினி என்பவள் பெண் தான் என்று ரிச்மான்ட் பல்கலைக்கழகத்தின் சமயத் துறைப் பேராசிரியர் மிராண்டா ஷா உறுதிபடத் தெரிவிக்கிறார்.

தமிழகத்தில் இருந்து டாகினி என்ற யோகினி போதிசத்வர் மூலமாகச் சீனாவுக்குப் போய் அங்கிருந்து ஜப்பானுக்கு போயிற்று.

டாகினியும் கலச பூஜையும்

டாகினி வழிபாடு பெண்ணுறுப்பு (ஆவுடை) வழிபாடாகத் தோன்றியதால் பிற்காலத்தில் கலச பூஜையாக மலர்ந்தது. ஆவுடையைக் கலசமாக வழிபடுவது தாந்தீரிக மரபு. பிற்காலத்தில் இந்து பௌத்த சமயத்தில் ஆவுடைக்குப் பதிலியாக நீர் நிறைந்த கும்பத்தை அல்லது கலசத்தை வைத்து வழிபாடுகள் செய்தனர். கலசத்தின் மீது தேங்காயை வைத்தும் இவ்வழிபாடு நடத்தப்பட்டது. இந்தத் தேங்காயும் கலசமும் பாணத்தையும், ஆவுடையையும் குறித்தது. வஜ்ராயண பௌத்தத்தில் பெண் தெய்வ வழிபாடுகளில் கலச பூஜை இடம் பெற்றது.

டாகினி 'ஓ இனாரி' எனப்பட்டாள்

லிலித் வழிபாட்டு வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்டாள். ஆனால், காளியும், இடாகினியும் அதிகாரப் பண்பு மாற்றப்பட்ட அமைதியான உருவத்துடன் ஏற்றுக்கொள்ளப் பட்டனர். காளியின் அமைதியான வடிவம் பார்வதி. டாகினியின் அமைதியான வடிவம் ஓ இனாரி ஆவார். இவ்வாறாகத் துடியான பெண் தெய்வங்களை ஆணாதிக்கச் சமய வரலாறு அமைதிப் பெண் தெய்வங்களாக மாற்றியது.

ஜப்பானின் வழிபடு தெய்வம் டாகினி

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து டாகினியை ஜப்பான் நாட்டில் வணங்கத் தொடங்கினர். அப்போது அவளை அரை நிர்வாணப் பெண்ணாக யோகினியாகச் சித்திரித்தனர். ஹெலான் அரசின் காலம் முடியும் போது இடாகினியை யோகினி என்ற நிலையில் இருந்து ஷிந்தோ தெய்வமான நரி அரசியுடன் இணைத்துவிட்டனர். இவளுடன் எப்போதும் ஒரு வெள்ளை நிற நரி இருக்கும் என்று தெரிவித்தனர். ஜப்பானிய மொழியில் கித்சுனே என்றால் நரி. ஆதியில் ஜப்பானியர் நரிகளுடன் வசித்தனர். எனவே அவர்களின் மண்ணின் சமயமான ஷிந்தோ சமயத்தில் நரியும் ஒரு பெண் காவல் தெய்வம் ஆயிற்று. இதற்கு

ஒன்பது வால்கள் உண்டு எனச் சித்திரித்து இதன் அதீத சக்தியை வெளிப்படுத்தினர். இதனை ஷிந்தோ காமி என்பர். நரியை அரசியாக்கி **ஷிங்கோ போசாத்சு** என்றனர். சொர்க்கத்தில் உள்ள நல்ல நரி அரசியை **கிக்கோ தென்னோ** என்றனர். இந்த வெள்ளை நரி எப்போதும் டாகினியுடன் இருக்கும். டாகினியின் இருப்பை இந்த நரியின் மூலமாக அறியலாம்.

வெள்ளை நரியின் தரிசனம்

தாயிரோநோ கியோ மோரி என்பவன் ஓர் இனக்குழுத் தலைவன். அவன் ஒரு முறை சாலையில் நடந்து வந்தபோது கித்சுனே என்று



ஜப்பானியர் அழைக்கும் வெள்ளை நரியைக் கண்டான். உடனே அங்கிருக்கும் டாகினிக்கு அவன் சிறப்புப் பூசைகள் நடத்தினான். அதனால் அவன் அந்த நாட்டின் தலைவனாகி முடிசூட்டி அரசாண்டான் என்ற நம்பிக்கை ஜப்பானில் ஆழமாகப் பதிந்து இருப்பதனால் இன்றைக்கும் டாகினி வழிபாடு அங்கு மந்திர உச்சாடனமாக நடைபெற்று வருகிறது.

ஓ இனாரி

டாகினியின் தூதுவராக விளங்கும் வெள்ளை நிற நரியை ஓ இனாரி என்ற சொல் குறிக்கின்றது. ஜப்பானிய மொழியில் ஓ என்ற முன் ஒட்டு தமிழின் திரு என்பதற்கு நிகரானதாகும். இந்நரியை **போ ஓ இனாரி** என்பர். இது ஆண், பெண் மற்றும் அலி வடிவிலான தெய்வமாகும். இடாகினியின் அடுத்தக் கட்ட வளர்ச்சியான ஓ இனாரியை மூன்று தெய்வங்களின் சேர்க்கை என்றும் ஐந்து தெய்வங்களின் சேர்க்கை என்றும் ஜப்பானில் புகழ்வது உண்டு. **இனாரி ஓ காமி** என்ற பெயரில் இன்று டாகினியை வழிபடுகின்றனர். காமி என்றால் ஜப்பானின் பூர்விக சமயமான சந்தோ சமயத்தில் தெய்வம் என்று பொருள்படும். இத்தெய்வம் செல்வத்துக்கும் வெற்றிக்கும் உரியதாகும். வளமை, நரி, அரிசி, தேயிலை, மது, தொழில்துறை, வேளாண்மை, வணிகம்,



கருங்கொல்லர் ஆகிய அனைத்துக்கும் ஓ இனாரியே காவல் தெய்வம் ஆகும்.

நிறைவு

இந்தியாவில் காளியும் டாகினியும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையனவாக உள்ளன. இவை இரண்டும் காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களை அடைந்துவிட்டன. ஆனால் இங்கிருந்து ஜப்பானுக்குச் சீனா வழியாகச் சென்ற டாகினி அங்கு **டாகினி தென்** என்ற பெயரில் அன்று முதல் இன்று வரை எவ்வித மாற்றமும் அடையாமல் காவல் தெய்வமாகப் போற்றப்படுகிறது.

காளி ஆக்கவும் செய்வாள்; அழிக்கவும் செய்வாள் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்ற பழமொழிக்கு உதாரணமாக விளங்குகிறாள். இவள் ஆணின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்படாத சுதந்திரப் போக்குடையவள் என்பதால் இந்த நுற்றாண்டிலும் இவள் முக்கியத்துவம் பெறுகிறாள்.


இந்நூற்றாண்டின் பெண்ணியவாதிகள் பெண்களின் பாலியல் ஆசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்து உடையவர்கள் என்பதால் லிலித்தைத் தீவிரப் பெண்ணியத்தின், கட்டுப்படுத்தப்படா பாலுறவின் முன்மாதிரியாகக் காண்கின்றனர். ஆதாம் லிலித் பாலுறவின்போது ஆதாமிடம் லிலித் தனது மேலாதிக்க நிலையை உறுதி செய்து தன்னுடைய வேட்கையைத் தணித்துக் கொள்ளும் உரிமை தனக்கிருப்பதாகக் கோரிய உரிமை, இன்றைய தீவிரவாதப் பெண்ணியலாருக்கு முன்னோடியாகத் தோன்றுகிறது. அவள் ஒரு தீவிர பெண்ணியவாதத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றாள். இப்பெண்கள் பார்வதியை விட காளியையும் லிலித்தையும் பெண்ணியவாதியாகப் போற்றுவர். காலம் மாறும்போது கருத்தாக்கமும் மாறுவது திண்ணம்.

2. பெண் பூப்பின் சமய வரலாறு

பூப்படைதல் என்பது பெண்களின் வாழ்வில் நடைபெறும் ஒரு இயற்கையான நிகழ்வு என்று இன்று நாம் கருதுகிறோம். ஆனால் உணவுச் சேகரிப்பு மற்றும் வேட்டைச் சமூகத்தில் பூப்படைவதைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் பின்னர் குழந்தைப் பேறு உண்டாவதை அறிந்து பூப்புக்குருதியைத் தெய்வமாகப் போற்றினான். சக்தியை முதன்மைத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் சாக்த நெறியில் பூப்புக்குருதி தெய்வாம்சம் உடையதாகவும். வழிபாட்டுக்குரியதாகவும் விளங்குகிறது. அதன் தொன்று தொட்டு வந்த பழக்கமாகவே ஆடிப்பூர நன்நாளில் தாந்தீரிக மரபில் அம்மன் பூப்படைந்த நாளாகப் புராணத் தன்மை பெற்றுள்ளது. பிறகாலத்தில் அம்மனின் பிறந்த தினம் என்றும் இந்நாள் முக்கியத்துவம் பெறுகிறது.

தேவியின் பூப்பு

தட்சண் யாகம் தொடர்பாக சிவனுக்கும் சக்திக்கும் முறண்பாடு தோன்றிய போது சிவபெருமான் கோபத்துடன் சக்தியை தலைக்குமேல் தூக்கிச் சுழற்றிக் கீழே எறிந்தார். அப்போது அவளது ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வோர் இடத்தில் சிதறி விழுந்தது. தேவியின் பெண் உறுப்பு விழுந்த இடம் அஸ்ஸாமில் உள்ள காமாக்யா. இங்குள்ள கோயிலில் தேவியின் பூப்பு வழிபாட்டுத்தன்மை பெற்றுள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை அம்மன் பூப்படையும் மூன்று நாட்கள் கோயில் பூட்டப்பட்டு நான்காவது நாள் திறக்கப்படுகிறது. அந்த நாட்களில் அருகில்



காமாக்யா கோவில் - அஸ்ஸாம்

ஓடும் பிரம்மபுத்ரா நதி சிவந்து காணப்படுவது இயல்பு. ஆந்திராவில் உள்ள தேவிபுரம் கோயில் தாந்திரிக மரபு சார்ந்தது. அங்கு ஸ்ரீவித்யா பூஜை நடைபெறும். அங்கும் ஆண்டுக்கொரு முறை தேவி பூப்படையும் மூன்று நாட்கள் கோயில் பூட்டப்பட்டு நான்காம் நாள் திறக்கப்படும். கேரளாவிலும் இம்முறையைக் காண்கிறோம். தேவி உடுத்தியிருந்த சேலையில் பூப்பின் கறை இருப்பதைத் தாந்திரிகள் கண்டதாக சொல்வர். அந்தத் துணியின் சிறு பகுதியை பிரசாதமாக பெற்றுக்கொண்டு வீட்டில் வைத்து வணங்கி வந்தால் செல்வம் பெருகும் என்பது கேரள பக்தர்களின் நம்பிக்கை ஆகும். ஆந்திராவின் தேவிபுரத்திலும் தமிழ்நாட்டில் ஓம் சக்தி கோயில்களிலும் பெண்கள் கோயிலுக்குள் சென்று அம்மனை வணங்குவதற்குப் பூப்புக்காலத் தடை கிடையாது.

பூப்பின் புனிதம்

மனித குல வரலாற்றில் வேளாண்மை தொடங்குவதற்கு முந்திய வேட்டைக் காலத்திலும் அதற்கு முந்திய உணவு சேகரிப்புக் காலத்திலும் பூப்புக்காலத்தில் பெண் போற்றப்பட்டாள். அவளைத் தனியிடத்தில் வைத்து ஊட்டச் சத்துள்ள உணவுகளைக் கொடுத்துப் பாதுகாத்தனர். வட அமெரிக்கா

மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் பெண்களின் மாத விடாய்க் காலம் முறையாக இல்லாவிட்டால் பிரபஞ்சத்தில் பெருந்தீங்கு ஏற்படக் கூடும் என்று அஞ்சினர். அவளது பூப்பின் ஆற்றல் அண்ட சராசரங்களையும் தாக்கும் என்று நம்பினர். இந்நம்பிக்கை பெண்ணை, பெண் உறுப்பைப், பூப்புக்குருதியைத் தெய்வமாக வணங்கும் தாந்திரிக மரபில் தீவிரமாகப் பின்பற்றப்பட்டது. தாந்திரிகம் என்பது இந்தியாவில் மட்டுமில்ல உலகெங்கும் காணப்பட்டது.

கடற்கரையினர், ஆநிரை மேய்ப்போர், கைவினைஞர் போன்றவர்களை விட வேளாண்தொழில் செய்வோரே குழந்தைப் பேற்றுக்குரிய பூப்புக்குருதியைப் பிரதிபலிக்கும் பெண் தெய்வங்களை [ஏழு கன்னிமார் உள்பட பலர்] அதிகமாக வழிபட்டனர்.



சப்த கன்னிமார்கள்

வேளாண்நிலங்களும் பூப்புக்குருதியின் சக்தியும்

பெண் வழிபாட்டுச் சமய மரபு பூப்புக் காலத்தில் பெண் தூய்மையும் ஆற்றலும் படைத்தவளாக இருக்கிறாள் என்ற நம்பிக்கையை விதைத்தது. அவளால் அப்போது நோயுற்றவர்களைச் சுகமாக்கும் மந்திர சக்தி பெற்றிருப்பாள் என்று நம்பினர். அவள் விளை நிலத்தில் நடந்து வந்தால் கதிர்களில் ஒட்டியுள்ள புழு, பூச்சி வண்டுகள் உதிர்ந்துவிடும். பயிரின் விளைச்சல் பெருகும் என்று அவளை வயலில் நடக்க விட்டனர். பின்னர் இக்கருத்து மாற்றப்பட்டு அவள் தூய்மையற்றவள் என்று நம்ப வைக்கப்பட்டது.

வடமேற்கு பாகிஸ்தானில் சிதறால் மாவட்டத்தில் வாழும் காலாஷ் இனத்து மக்கள் பூப்படைந்த பெண்களை பாஷாளி என்ற தனி வீட்டில் வைத்து இன்றும் பாதுகாத்து வருகின்றனர். நேபாளத்துக் கிராமங்களிலும் இந்நடைமுறை இன்றும் வழக்கில் உள்ளது. நாகரிகம் பெருகிய ஊர்களில் அல்லது ஆண் முதன்மைச் சமுதாயம் மலர்ந்த பிறகு பெண்ணின் தூய்மை, தூமை என்று வஞ்சப் புகழ்ச்சியாக ஏளனம் செய்யப்பட்டது. எனினும் சைவ வைணவ வழிபாட்டு மரபில் இருந்து



Menstrual blood is, in fact, considered pure and sacred, and plays a very important role in certain Trantric rituals

பூப்புச்சடங்கு நீக்கப்படவில்லை. ஆடிப் பூரத்து அன்று சில கோயில்களில் தலைமை பெண் தெய்வத்தின் பூப்புத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

சந்திரனும் பூப்பு சுழற்சியும்

ஆங்கிலத்தில் பூப்புக்குரிய சொல் இலத்தீன் மொழியில் மாதம் என்பதை குறிக்கும் mensis என்ற சொல்லில் இருந்து வந்தது. கிரேக்க மொழியில் சந்திரனைக் குறிக்க mene என்பர் இதனை ஆங்கிலம் moon என்று மாற்றி வழங்கியது. mene, mensis என்ற இரண்டு சொற்களும் மாதம் மற்றும் நிலவைக் குறிக்க காரணம் நிலவைக் கொண்டு அவர்கள்

நாட்களை மாதத்தைக் கணக்கிட்டதனால் ஆகும். ஒரு மாதம் என்பது இருபத்தெட்டு நாட்கள் ஆகும். அதனை ஒரு பவுர்ணமியில் இருந்து மறு பவுர்ணமி வரை என்று கணக்கிட்டனர். சந்திரனை அடிப்படையாகக் கொண்டு சித்திரை வைகாசி ஆனி, ஆடி மாத வரிசைகளும் பௌர்ணமி அன்று வரும் நட்சத்திரங்களின் பெயர்களால் வழங்கப்படுகின்றன. ஆக மாதந்தோறும் பெண்கள் பூப்படைவது 28 நாட்களுக்கு ஒரு முறை நடைபெற வேண்டும். சிலருக்கு 30, 32 நாட்களில் நடக்கலாம். ஆனால் ஆரோக்கியமான ஒரு பெண்ணுக்கு இருபத்தெட்டு நாட்களே கணக்கு என்று முன்னோர் அறிந்து கொண்டனர்.

பாம்பு வானவில்

ஆஸ்திரேலியாவின் பழங்குடிகள் பாம்பு வானவில் என்றொரு நம்பிக்கை கொண்டிருந்தனர். பாம்பு ஒன்று வானத்துக்கும் பூமிக்கும் செங்குத்தாக நின்று மேகத்திலிருந்து தண்ணீரைக் குடிக்கும். அது வாயிலிருந்து சிந்தும் தண்ணீரே மழையாகக் கொட்டுகிறது என்று நம்பினர். இந்த நாகம் அலைகளின் ஆர்ப்பரிப்பு, பூரணச் சந்திரனின் வரவு, பூப்பின் புறப்பாடு, என்று ஆன்மிக சக்தியும் வளமையும் கொண்ட அனைத்துக்கும் ஆதாரமாக விளங்குகிறது என்று



நம்பினர். பாம்பு வானவில் மூலமாக வானத்து நிலவுக்கும் பெண்ணின் கருவளத்துக்கும் ஒரு முடிச்சு போடப்பட்டது.

பூப்புக்குருதியின் ஆற்றல்

இக்குருதி எதிரிகளை அழிக்க வல்லது; மழை, காற்று, புயல் போன்ற இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்த வல்லது, மனிதர்களைத் தம் பால் வசியப்படுத்தும் சக்தி மிக்கது. வயலில் விளைச்சலைப் பெருக்கும் ஆற்றல் படைத்தது. மனிதர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி மனித வளத்தை செழிக்கச் செய்வதாகும்.

பூப்புக்குருதியின் ஆற்றல் சார்ந்த நம்பிக்கைகளை அன்றாட வாழ்வில் இன்றும் காணலாம். மாத விடாய்த் துணியை வெளியே தெரியும்படி வீசினால் அதனை எடுத்துக்கொண்டு போய் புதிர வண்ணார் என்ற பிரிவினரிடம் கொடுத்து செய்வினை ஏவல் பில்லி சூனியங்கள் வைக்க முடியும். முட்டுத்துணி என்ற இத்துணியை கொடுத்தால் 'முட்டுப் புள்ளி' என்ற மாந்திரிகம் செய்து ஒருவரைக் கொல்லலாம் என்ற அச்சம் இருப்பதால் பிறர் கண் படாமல் பிறர் கைக்கு கிடைக்காமல் அத்துணிகளை எரிக்கவோ புதைக்கவோ கூறினர். இதனை சர் ஜேம்ஸ் ஃ பிரேசர் தனது *Golden Bough* என்ற நூலில் *Homoeopathic ritual* என்பார்.

மந்திர சக்தி

ஆப்பிரிக்காவிலும் பூப்புக்குருதியை ஆக்கவும் அழிக்கவும் வல்லது என்று நம்பினர். மாயோன் மரபில் இக்குருதியில் இருந்து தான் நிலவுத் தெய்வம் (Moon Goddess) தோன்றியது என்று தொன்மக்கதை கூறினர். இக்குருதியைச் சிறு பூச்சியாக மாற்றி மந்திரவாதிகள் பிறர் மீது ஏவி விட்டு தீங்கிழைப்பர் என்று பயந்தனர். மேலே நாடுகளில் குறிப்பாக உரோம் நாட்டில் பூப்புக்குருதியைக் கண்டால் இடிமழை

நின்றுவிடும் என்று நம்பியதாக பிளினி எழுதியுள்ளார். கனமழை, இடிமழை பெய்து ஊர் அழியும் நேரத்தில் பூப்படைந்த பெண் உடையின்றி வானம் தன் பெண்ணுறுப்பைப் பார்க்க நடந்து வந்தால் அந்தக் கனமழை நின்றுவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. கீழை நாடுகளில் சில பகுதிகளில் மழை வேண்டியும் இச்சடங்கு நடைபெறுகிறது. [பாரதிராஜாவின் கிழக்கே போகும் ரயிலில் இக்காட்சி இடம்பெற்றுள்ளது].

மருத்துவ சக்தி

*மனிதர்களை நீண்ட காலம் வாழவைக்கும் காயகல்பம் தயாரிக்க சீனாவில் பூப்புக் குருதியைப் பயன்படுத்தினர். இக்குருதியைக் கொண்டு **பின் யின்*** (Pin Yin) *என்ற மருந்தைத் தயாரித்தனர். இது மனிதனின் ஆயுட்காலத்தை நீட்டிக்க வல்லது என்று இன்றைக்கும் நம்பி அங்கு இம்மருந்தை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். வங்காளத்தில் உள்ள பவுல் (Bauls) என்ற பிரிவினர் சமயாசாரமான ஆடல் பாடல்களில் கெட்டிக்காரரர்கள். இவர்கள் வைணவம் சாக்தம் தாந்திரிக பவுத்தம் சாங்கியம் சூஃபி என பல சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி வருகின்றனர். இவர்கள் தேக சாதனப் பயிற்சியில் நாட்டம் உள்ளவர்கள்.*

பவுல்கள் நீரும் பாலும் கலக்கும் போது [ஆண் பெண் கலவி] யோக சித்தி அல்லது யோகானந்தம் கிடைக்கும் என்று நம்புகின்றனர். பெண்ணின் பூப்புக்காலத்தில் தேக சாதனம் செய்வதை **'மகாயோகம்'** என்பர். பூப்புக்காலத்தின் முதல் நாளை அமாவாசை என்றும் மூன்றாம் நாளைப் பவுர்ணமி என்றும் அழைத்தனர். இக்காலகட்டத்தில் கல்வியில்



ஈடுபட்டால் [மருத்துவ முறைப்படி மிக மிகத் தவறு] தெய்வீகப் பிரேமமும் ஆன்மிகப் பரவசமும் கிட்டும், அதுவே மனித வாழ்வின் மிகப் பெரிய சாதனை என்கின்றனர். தேக சாதனத்தின் போது பெண் மேலே இருக்க வேண்டும்; அவள் பரவச நிலையை அடைய வேண்டும்; ஆனால் ஆண் அந்நிலையை அடையாமல் தனது மூச்சுப் பயிற்சியின் மூலமாக முதுகுத் தண்டுவடத்தில் மேலும்

கீழுமாக மூச்சை ஏற்றி தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவள் அவனுக்குத் தனது சக்தி முழுவதையும் வழங்க முடியும். எனவே இச்சாதனை போகம் சார்ந்ததன்று; முழுக்க முழுக்க யோகம் சார்ந்ததாகும். இந்நிலையில் இருக்கும் காளியின் உருவங்களை படங்களை தாந்திரீகர்கள் வைத்து வணங்குவதன் நோக்கம் தாமும் அவ்வாறு சிவனே என்று கிடந்து சக்தியை முழுவதுமாகப் பெறுவதற்கே ஆகும். 'சும்மா இருத்தலே சுகம்' ஆகும் என்பது கடினமான பயிற்சி ஆகும்.

கிரேக்கத் தேவதை ஆர்டிமிஸ்

கிரேக்கத்தில் ஐந்தாம் நூற்றாண்டில் ஆர்ட்டிமஸ் வழிபாடு பூப்படைதல் மற்றும் முதல் பேறுக்குரியதாக விளங்கியது. இதனை Cult of Artemis என்பர். பூப்படையாத சிறுமிகள் [பர்த்திநோஸ்] தாம் பூப்படைய வேண்டும் [Gyne] என்பதற்காக இத்தெய்வத்தை வணங்கி ஆடிப்பாடுவர் அப்போது அவர்கள் கரடியின் தோலை அணிந்து கொள்வதும் உண்டு. கையில் ஒரு கூடை நிறைய அத்திக்கனிகளை வைத்திருப்பர். அத்தி மரம் பூக்காமல் காய்க்கும். ஆர்டிமேஸ் பேரழிவை ஏற்படுத்தும் புயல்

மழை காற்றை அடக்கும் வல்லமை பெற்ற தெய்வம் ஆவாள்.

ட்ராய் நகரத்தை நோக்கித் தமது போர்க்கப்பல்கள் செல்ல காற்று சாதகமாக இல்லாமல் புயலாக வீசியதைக் கண்ட கிரேக்கர்களின் தலைவன் அகமேம்னான் ஆர்டிமிசை வணங்கி நின்றான். அவளும் 'உன் மகளைப் பலியாகக் கொடுத்தால் காற்று சீராகும்' என்றாள். அவனும் அதைச் செய்தான். காற்று



கிரேக்க தேவதை

அவனுக்குச் சாதகமாக வீசிற்று. அவன் ட்ராய் நகரை நோக்கிப் பயணமானான். அகமேம்னான் பலி கொடுத்த பெண்ணான இஂஃப்ஜினியாவை ஆர்டிமஸ் ஒரு தீவுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள தனது கோயிலில் பூசாரிணியாக்கினாள். கிரேக்க நாட்டில் ஆர்டிமஸை பூப்பு மற்றும் முதல் பேறின் [first birth] தெய்வமாக வணங்கி வந்தனர்.

ஏழு கன்னிமார் வழி வந்தோர்

ஆயுர்வேதம் என்னும் மருத்துவ முறை பூப்புக் காலத்தில் பித்தம், வாதம், கபம் என்னும் மூன்று தோஷங்களும் பெண்ணை விட்டு விலகி விடும் என்கிறது. பூப்புச்சுழற்சி நின்ற பிறகு பெண்கள் இம்மூன்று தோஷங்களும் தாக்குவதால் அவதிப்படுவர். சித்தர் மரபில் வானில் இருந்து இறங்கி பூமிக்கு வரும் சூரியனின் சிவந்த கதிர்கள் பெண்களின் பூப்புக்குருதியை குறிக்கிறது என்பர். சூரியனின்



ஏழு கதிர்கள் பூப்படைந்த சப்த கன்னிகளைக் குறிப்பதாகக் கொண்டால் மனித குலம் சப்த கன்னிகள் என்ற இந்த ஏழு மூதாய்கள் மூலமாக உருவானது எனக் கருத இடமுண்டு. முச்சந்திகளிலும் நாற்சந்திகளிலும் காவல் தெய்வங்களாக இருந்து பெண்களையும் குழந்தைகளையும் காவல் காக்கும் ஏழு கன்னிமாரும் பூப்புத் தெய்வங்கள் ஆவர்.

வாமாசாரிகளை முற்றிலும் விளக்கியது போல சப்த கன்னியரை விலக்க இயலாமல் அவ்வழிபாட்டை வைதிகச் சமயங்கள் ஏற்றுக்கொண்டன. சைவக் கோயில்களில் சிவன்



FIG. 146.—Indra ; Chidambaram.

சந்நிதியின் பிரகாரத்தில் சப்த கன்னியர் சிலைகள் இடம்பெற்றுள்ளன. வடக்கே இந்த எண்ணிக்கையில் ஒன்றை அதிகரித்து அஷ்டமாத்ரிகா என்றும் ஒன்றைக் குறைத்து கார்த்திகைப் பெண்டிர் அறுவர் என்றும் சொல்வதுண்டு. ஏழு கன்னிமார் அல்லது சப்தகன்னியர் காவல் தெய்வங்களாக இருப்பதால் குறிப்பாகக் குழந்தை நலம் பேணுவதால் மனித எண்ணிக்கையை அதிகரிக்க விரும்பிய வேளாண்குடியினர் இத் தெய்வங்களைத் தங்கள் குல தெய்வங்களாக்கி வழிபட்டு வருகின்றனர். இவர்களில் ஒருத்தி தேவேந்திரனின் மனைவியான இந்திராணி [இவள் குழந்தைப் பேற்றுக்கு உரியவள்] ஆவாள் அதனாலும் ஏழு கன்னிமார் வழிபாடு தமிழ் நாட்டில் வேளாண்குடி மக்களிடம் விமரிசையாக நடத்தப்படுகிறது.

சைவமும் வைணவமும்

பூப்புக்குருதி வழிபாடும் வணக்கமும் சைவ வைணவ சமயங்களில் வெவ்வேறு வகையில் இடம்பெற்றன. உமாதேவியான பார்வதி மகாதேவனான சிவபெருமானிடம் மனிதர்கள் எப்படி எதை வழிபட வேண்டும் என்று கேட்ட போது 'சாதகன் என்போன் யோனி என்னும் பிரபஞ்சத்தைக் கலவியின் மூலமாக வழிபட வேண்டும்' என்றார். மதுவும் மலர்களும்

படைத்து வணங்க வேண்டும்'. இதில் யோனி என்பது மகாமாயா என்றும் லிங்கம் என்பது சதாசிவம் என்றும் எடுத்துரைத்தார். வைணவம் தமது திருமண் அல்லது நாமத்தில் திருமகளைக் குறிக்கச் சிவப்பு வண்ணத்தை ஸ்ரீசூர்ணம் என்ற பெயரில் நடுக்கோடாக ஏற்றுக்கொண்டது. இந்தச் சிவப்புக் கோடு குருதியின் அடையாளமாகவும்,தாய்மையின் சின்னமாகவும் விளங்குகிறது.

அர்க்கியம் எனப்படும் சூர்ய, சந்திர, காலை மாலை சமயச்சடங்கில் கையைக் குகை போலக் (யோனி) குவித்து அதன் வழியாக நீர் சொரியும் முறையை யோனியின் வழியாக வழியும் நீரைக் குறிக்கும் அடையாளமாகக் கொள்கின்றனர். ஆதி காலத்தில் இருந்து இன்று வரைச் செய்யப்பட்டு வரும் பெண் குறி, பூப்பு, உறவு



ஆகியவற்றைக் குறிக்கும் சமயச் சடங்குகள் அனைத்தும் பண்டைய காலத்து வளமைச் சடங்குகளே ஆகும். சமய நடைமுறையில் இவ்வாறு செய்வதை போன்மைச் சடங்கு *[imitative ritual]* என்பர்.

வளம் நாடிச் செய்த ஒரு சடங்கு காலப்போக்கில் புராணமயமாக்கப்பட்டு காரணங்கள் வெவ்வேறு கற்பிக்கப்பட்டு ஆனால் செயல்பாடு மட்டும் மாறாமல் தொடர்ந்து வருகிறது. இச்சடங்கில் சூரிய சந்திரரை பிதுர்க்களை நோக்கி வணங்கினாலும் தமது வம்சம் விருத்தியடைய வேண்டும் என்ற வேண்டுதலே முன் வைக்கப்படுகிறது. வம்ச விருத்தி என்ற இதே காரணத்துக்காகத்தான் அன்றும் இச்சடங்குகள் செய்யப்பட்டன.

கௌலாகமம்

யோனி பூஜையைப் பூப்புக் காலம் அல்லாது வேறு காலத்தில் செய்வதால் பலன் இல்லை அல்லது வேறு காலத்தில் செய்வதால் சித்தி பெற முடியாது என்று தாந்திரீகம் பூப்புக் குருதி வழிபாட்டின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. இக்குருதியைப் பருகலாம், தொழலாம், பூப்புக் காலத்தில் உறவு கொள்ளலாம் என்ற தாந்திரிக முறைகள் பின்பற்றப்பட்டன. இவர்கள் மாதவிடாய்த்

துணியை தேன், மஞ்சள் பொடி கலந்த பாலில் நனைத்துப் பருகினர். இதனால் தொழுநோய், காச நோய் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் அண்டாது என்று நம்பினர்.

கௌலாகமம் என்ற தாந்திரீக சாஸ்திரம் சாம்பல், சுரதம், விந்து, பூப்புக்குருதி மற்றும் நெய் ஆகியவற்றை உலகின் ஐந்து புனிதப் பொருட்கள் என்று உரைக்கிறது. இவற்றில் விந்து மற்றும் குருதியைப் பருகுவது தான் கௌலாகமம் என்று தெளிவுபடுத்துகிறது. தாந்தீரிகத்தில் பூப்புக்குருதிக்குப் பதிலாக பெண்ணின் சுரத நீரைப் பருகுவதையும் ஏற்றுக்கொள்கின்றனர். பழஞ்சமய மரபுகள் மாறி வைதீக மரபுகள் வந்த பின்பு இவர்களைத் தூமை [தூய்மை] குடிக்கி என்றும் சாண்ட குடிக்கி என்றும் ஏசினர். [சண்டு என்றால் பலம் [ஜண்டுபாம் என்ற மருந்து].

கௌலஞான நிர்ணயம் என்ற நூல் மத்சேந்திரநாதி என்பவர் இயற்றியதாகும். இந் நிர்ணயத்தின் எட்டாம் பகுதியில் “நெற்றியில் பூப்புக்குருதியைத் திலகமாக இடுகிறவனை அம்மை நோய், தொழு நோய் போன்ற கொடிய நோய்கள் தாக்காது என்றும் பாம்புத் தோல் உரிப்பது போல நோய் இவரை விட்டு அகன்று விடும்” என்றும் சொல்லப்பட்டுள்ளது. [நெற்றிக்



Vamachara

குங்குமத்தை கேலி செய்வோர் நெற்றியில் என்ன ரத்தம் ஒழுகுகிறது என்று கேட்பதற்குரிய பின்னணிக் காரணம் இது தான்]. வாமாசாரம் அல்லது வாம மார்க்கத்துக்குரிய வாமை என்ற குருதி, மது மற்றும் விந்துடன் சேர்த்து உட்கொள்ளப்படும் போது அது ஆன்மீக முழுமை பெறுகிறது. சங்கராச்சார்யர் வாமாசாரம் வேதம் சார்ந்தது அல்ல எனவே இதனைப் பின்பற்றலாகாது என்று கண்டிக்கிறார். வாமாச்சாரம் தாந்திரிக மரபு சார்ந்தது என்பதால் வைதிக மரபுகளுக்குக் கட்டுப்படாது. ஏனெனில் இது குடும்பஸ்தர்களுக்கு ஏற்றதன்று.

உபநிடதங்களில் பூப்புக்குருதி வழிபாடு

முக்தீக உபநிடதங்கள் எனப்படும் 108 உபநிடதங்களில் யோக உபநிடதம் ராஜ யோகம் பற்றி எடுத்துரைக்கும் போது பூப்புக்குருதியை 'ரஜஸ்' என்றும் விந்துத் துளியை 'ரேதஸ்' என்றும் குறிப்பிடுகிறது. ரஜஸூம் ரேதஸூம் இணைவதே **ராஜயோகம்** ஆகும். பெண்கள் பற்றிய தகவல்களைக் கூறும் மாத்ரீக உபநிடதம், கன்னித் தீட்டு எனப்படும் முதல் குருதியை சுயம்பு என்கிறது. திருமணத்துக்கு முந்தைய குருதியான **குண்டம் என்பது மனிதர்களின் ஆசைகளை நிறைவேற்றும் சக்தி** பெற்றது. விதவையால் வளர்க்கப்பட்ட பெண்ணின் குருதியான **கோலா என்பது** கடவுளரையும் கட்டுப்படுத்த வல்லது. திருமணமான பின்பு வரும் முதல் பூப்புக்கு **ஸ்வபுஷ்பம்** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பூப்புக்குருதிக்கு எதிரான புராணக் கதை

தாந்திரிகம் செல்வாக்கிழந்து வைதிக சமயங்கள் பெருவளர்ச்சி பெற்ற போது தாந்திரீக சம்பிரதாயங்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும், விமர்சனத்துக்கும் உள்ளாயின. அது வரை பூப்புக்குருதி ஒரு வரம் என்று கருதி வந்த மக்களிடம் அது சாபம் என்ற கருத்துத் திணிக்கப்பட்டது. மேற்கிலும் ஐரோப்பாவில்

paganism என்ற பழங்குடி சமயம் மறைந்தது. கத்தோலிக்கம் மற்றும் மறுமலர்ச்சி கிறிஸ்துவ சமயப் பிரிவுகள் தோன்றின. அவை பெண்களின் குருதியை விலக்காகக் [taboo] கருதின. கிறிஸ்துவ வேதாகமம் மனைவியின் மாத விடாய்க் காலத்தில் அவளுடன் தங்கியிருக்கக் கூடாது என்று லேவியராகமம் [15;24; 18;19] எசேக்கியேல் [22;10] மற்றும் மாற்கு 15;31] நூல்களில் தெரிவித்துள்ளது. இஸ்லாம் சமயமும் பெண்கள் மாத விடாய்க் காலங்களில் சமய நூல்களைத் தொடக் கூடாது. வழிபாட்டுத் தலங்களுக்கு வரக் கூடாது என்று தடை விதிக்கின்றது.


நரகாசுரன் என்பவன் வராக மூர்த்திக்கும் பூமா தேவிக்கும் பிறந்தவன் என்றாலும்



அவனிடம் அசுரப்பண்புகள் இடம்பெற்றதற்குக் காரணம் பூமா தேவி பூப்படைந்திருந்த நிலையில் வராக மூர்த்தி அவளுடன் உறவு கொண்டதேயாகும். இக்கதையும் காரணமும் பூப்புக் காலத்தில் கணவன் மனைவி சேரக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தத் தோற்றுவிக்கப்பட்டது. பூப்புக்காலம் என்பது தூய்மையற்றது எனப் புராணங்களின் மூலமாக சமயப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஸ்ரீமத் பாகவதமும் கந்த புராணமும் இப்பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்தன.

இந்திரன் விஸ்வரூபனை [ஸ்ரீமத பாகவதம்] அல்லது விருத்ரனைக் [கந்த புராணம்] கொன்ற பாவம் தொலைய அவன் தனக்குக் கிடைத்த சாபங்களை **நீர், மண், பெண், மரம்** ஆகியவற்றுக்குப் பிரித்துக் கொடுத்தான். அதில் பெண்ணுக்குக் கிடைத்த சாபம் என்பது மாத விலக்கு என்ற கருத்து பரப்பப்பட்டதால் அதுவரை சுரதத்தை, பூப்புக்குருதியை உட்கொள்ளலாம் என்று நம்பி நடைமுறைப்படுத்தியவர்கள் இக்கதையின் மூலமாக அது சாபத்தின் விளைவு அதை உட்கொள்ளக் கூடாது என்ற விளக்கத்தைப் பெற்றனர்.

கந்த புராணம் [பதினான்காம் நூற்றாண்டு] மாத விடாய்க் காலத்தில் பெண்ணின் நிலையைக் கேவலப்படுத்தி வகைப்படுத்தியது. முதல் நாள் அவள் சண்டாளியாக இருக்கிறாள், அதனால் அவளுடன் உறவு கொள்ளக் கூடாது. மறு நாள் அவள் பிராமணரைக் கொலை செய்த பாவத்தை அடைகிறாள். மூன்றாம் நாள் வண்ணாத்தியாக இருக்கிறாள். நான்காம் நாள் தான் அவள் ருது ஸ்நானம் செய்து சுத்தமாகிறாள். முதல் மூன்று நாட்களும் அவளுடன் உறவு கொள்ளக் கூடாது. மீறி உறவு கொண்டால் மேற் கண்டவர்களுடன் உறவு கொண்ட பாவத்துக்கு அந்த ஆண் [கணவன்] ஆளாவான் என்று



அச்சுறுத்தினர். இது போன்ற மூடநம்பிக்கைகள் சமயத்தின் பெயரால் பரப்பப்பட்டன. ஆனால் நான்காம் நாள் அவன் கண்டிப்பாகத் தன் மனைவியுடன் தாம்பத்யம் வைத்துக்கொள்ள வேண்டும் இல்லையென்றாலும் அவன் பாவம் செய்தவனாவான். ஏனென்றால் அது கரு தங்கும் காலம் என்பதால் கண்டிப்பாகத் தனது வம்ச விருத்திக்காக அவன் தனது மனைவியுடன் கூடியிருக்க வேண்டும், என்று இந்து சமயம் தனி மனிதனை வழியுறுத்தியது.

பழஞ்சமயத்தில் பெண் வளம் போற்றப்பட்டது. அவள் அச்சத்திற்குரியவளாக இருந்தாள். வணங்கப்பட்டாள். வேளாண் சமூகம் தோன்றிய பிறகு பெண் அடிமை ஆனாள் அப்போது அவள் தொடர்பான அனைத்தும் மதிப்பிழந்து போயிற்று. புதிய புராணக்கதைகள் தோன்றியதில் பூப்பும் அருவெறுப்புக்கு உள்ளாயிற்று

3. செந்தாமரை - ஆவுடை வழிபாடு

[Vulva worship across the world]

ஆதிமனித வரலாற்றில் குழந்தை பிறப்பு அச்சம் தந்ததால் குழந்தை பிறக்கும் வழியை [கருவாய்] மரியாதையுடன் வணங்கினர். மாத விலக்குக் குருதியும் குழந்தைப் பேற்றுக்கு காரணமானதாகக் கருதப்பட்டு அதுவும் போற்றற்குரியதாயிற்று. சிவப்பு நிறம் மனித வளத்துக்கும் பச்சை நிறம் வேளாண் வளத்துக்கும் உரிய குறியீட்டு வண்ணங்கள் ஆயின. குழந்தை பிறப்பில் ஆணின் பங்கும் உண்டு என்பதை உணர்ந்தும் ஆண் ஆதிக்கம் தோன்றிய பிறகும் கருவாய் வணக்கம் அருகி விடவில்லை. அது ஆணுறுப்புடன் இணைக்கப்பட்டு ஒரே வடிவமாக [லிங்க ரூபமாக] வணங்கப்பட்டது. இது மனிதனின் அறிவியல் வளர்வதால் ஆன்மிகக்

கோட்பாடுகளில் ஏற்படும் வளர்ச்சியைப் குறிக்கிறது.

அகிலமெங்கும் பல் வேறு சமயங்களில் ஆண் பெண் பாலுறுப்புக்கள் இணைந்த வடிவங்கள் செல்வாக்குப் பெற்றாலும் கருவாய் வழிபாடு முழுவதுமாக மறைந்துவிடவில்லை. வெவ்வேறு பெயர்களில் மாறிக் கொண்டே வந்துள்ளது. சில பிரிவினர் தனியாக அதனை ஒரு சமயமாக வளர்த்தெடுத்து சாக்தம் என்று பெயரிட்டு அதில் தாந்திரிக மரபுகளைப் பின்பற்றி வந்தனர். தாந்திரிகம் என்பது பின்னர் பெண் தெய்வ வழிபாடாக பரிணமித்தது. கருவாய் வடிவம் பல எண்ணிக்கையுடன் வளர்ந்து ஸ்ரீ சக்கர உருவெடுத்தது. ஆண் வடிவம்



பிந்து [விந்து] என்ற பெயரில் கருவாயின் நடுவில் ஒரு புள்ளியாக [துளியாக] இடம்பெற்றது.

காமாட்சி அம்மனும் கருவாய் வழிபாடும்

இந்துமதத்தில் ஆவுடை எனப்படுவது கருவாய் வணக்கத்தைச் சுட்டும், வடிவம் ஆகும். அதனால் காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில் அது மட்டுமே வழிபடு பொருளாக அமைந்துள்ளது. காஞ்சிபுரத்தைப் பூ யோனி என்பதன் காரணமும் இதுவே. அப் புனிதத்தலம் பூவுலகின் யோனியாகப் போற்றப்படுகிறது. திருவானைக்கா கோவிலில் இன்றும் மதியம் உச்சி வேளையில் கோ பூஜை என்ற பெயரில் காராம் பசுவுக்குச் செய்யப்படும் பூஜை நிதர்சனமான கருவாய் பூஜை ஆகும். பசுவின்



பின்புறம் தொட்டு வணங்க வேண்டும் என்பது யோனி வழிபாட்டினைக் குறிப்பதாகும்.

உலகமெங்கும் அனைத்துக் கண்டங்களிலும் நாடுகளிலும் ஆதியில் ஆவுடை வணக்கம் இருந்தது. ஐரோப்பாவில் கிறிஸ்துவ சமயத்தின் தோற்றத்துக்கு முன்பு பல்வேறு பெயர்களில் பகிரங்கமாக நடந்த இவ்வழிபாடு பின்னர் மேரி மாதா வழிபாட்டுடன் இணைக்கப் பட்டது. நேபாளத்திலும் கிழக்கு ஆசிய நாடுகளிலும் பவுத்தம் ஆவுடை வழிபாட்டை நவீனமாக்கியது. ஆப்பிரிக்காவில் பல வாழ்வியல் சடங்குகளும் நம்பிக்கைகளும் ஆவுடை வழிபாட்டின் மிச்சங்களாக இன்றும் விளங்குகின்றன.

ஆதி சமயத்தில் தீமை நீக்கும் சக்தி

உடல் உறுப்புகளில் கருவாய் எனப்படும் பெண் உறுப்பு [யோனி] மறைசமயம் [பிறரறியாமல் பின்பற்றப்படும் சமயம்] எனப்படும் *occult* சமயத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவ்வுறுப்பைப் புனிதமானதாக மறை சமயமும் சாக்தமும் கருதுகின்றன. [இதுவே ஆதி சமயத்தில் *[primitive religion]* தாய்த் தெய்வ வழிபாடாக உருவெடுக்க காரணமாயிற்று.] பிரபஞ்ச ரகசியங்களின் சின்னமாக இவ்வுறுப்பு நம்பப்பட்டது. தீய

சக்திகளை விரட்டும் சக்தி இவ்வழிபாட்டுக்கு இருப்பதாக மக்கள் நம்பினர். திடீரெனப் பருவ மாற்றத்தினால் வெப்பு நோய், மழைக்கால நோய்கள், தாக்கும் போது குறிப்பாகக் குழந்தைகளைத் தாக்கும் போது மக்கள் பெண் உறுப்பு வழிபாட்டை மேற்கொண்டனர்.

கருப்பு முக்கோணம்

கிரேக்கத்திலும் ரோமானிய தேசத்திலும் பெண் உறுப்பைச் சின்னமாகக் கொண்டு பல பெண் தெய்வங்கள் வணங்கப்பட்டன தெஸ்மொஃபோரிய வழிபாட்டில் கருப்பு முக்கோண வடிவில் எள்ளு மிட்டாயும் தேனும் கலந்து வைத்து வழிபாடு செய்து அதனைப் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவது மரபு.



யோனி அடையாளச் சின்னங்கள்

இவ்வழிபாடு செய்யும் பெண்கள் தங்கள் உறுப்பைப் பிறர் அறியக் காட்டுவதால் அந்நாட்டின் தீய சக்திகள் அஞ்சி அகன்று விடும் என்று கிரேக்கர்கள் நம்பினர்.

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும்

இந்தியாவில் லஜ்ஜாவதி வழிபாடு போல இங்கிலாந்தில் ஷீலா னா கிக்ஸ் [Sheela na Gigs] வழிபாடு நடந்ததற்கான சிற்பங்கள் இன்றும் காணப்படுகின்றன. இச் சிற்பங்களில் பெண்ணின் உறுப்பு தன் இயல்பான அளவை விட மிகப் பெரியதாகக் காட்டப்பட்டிருக்கும். இவ் வழிபாடு பதினோராம் நுற்றாண்டில் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் பரவலாகக் காணப்பட்டது. பின்பு ஐரோப்பா



ஷீலா னா கிக்ஸ்

முழுவதும் விரைந்து பரவியது. பெண்ணுறுப்பு தீய சக்திகளை அகற்றும் என்ற ஆழமான நம்பிக்கை இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். இதனால் சுமார் அறுநூறு ஆண்டுகள் ஷீலா னா கிக்ஸ் வழிபாடு ஐரோப்பாவில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. அனைத்து நாட்டவரும் அவரவர் மொழிகளில் பல பெண் தெய்வங்களை அவற்றின் பிறப்புறுப்பை வழிபடு பொருளாகக் கொண்டு வணங்கி வந்தனர். தாம் பயன்படுத்தும் காபி கோப்பை முதல் கொண்டு அனைத்து பொருள்களிலும் வி என்ற ஆங்கில எழுத்து [V] வடிவம் இருக்கும்படி செய்தனர். V என்ற வடிவம் பெண்ணுறுப்பின் அடையாளம் ஆயிற்று. அதுவே வழிபடு சின்னமாக விளங்கியது. இன்றைக்கு ஓம், வேல், சூலாயுதம், சிலுவை போன்ற சமயச் சின்னங்கள் இருப்பது போல அன்று ஐரோப்பாவில் V என்ற ஆங்கில எழுத்து வடிவம் வழிபடு சின்னமாக விளங்கியது.

உறுப்பைத் திருகி எறிதல்

மனித வளமும் மற்றும் பயிர் வளமும் செழிக்க உதவும் சின்னமாகப் பெண்ணுறுப்பு அடையாளமும் வழிபாடும் சிறந்து விளங்கிய காலகட்டத்தில் பல்வேறு புரானங்களில் இதற்கான தொன்மங்கள் இடம்பெற்றன.



ஹவாய் தீவுகளில் வழங்கி வந்த தொன்மக் கதைகளில் செழிப்புத் தெய்வமாக காபோ வணங்கப்பட்டாள். இவள் பாதி மனிதனும் பாதி பன்றியுமாக இருந்த ஒருவனை நோக்கித் தன் பெண்ணுறுப்பைத் திருகி எறிந்ததும் அவன் அதைக் கவர்ந்து கொள்ள பூமியின் இறுதி வரை ஓடினான்.

பெண்கள் தமது உறுப்பைக் கழட்டி எறிதல் என்பது தமிழ் இலக்கியத்தில் காணப்படுகிறது. கண்ணகி தன் இடது முலையைக் கையால் திருகி எறிந்ததில் தான் மதுரை தீப்பிடித்து எரிந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கேரளா நாட்டில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட முலை வரியைச் செலுத்த இயலாத நாஞ்சிலி தனது இரு மார்புகளையும்



வீரப்பெண் நாஞ்சிலி

கத்தியால் அறுத்து வாழையிலையில் வைத்து வரி வசூல் செய்ய வந்த தண்டல்காரர்களிடம் கொடுத்துவிட்டு இறந்து போனாள். அவ்விடம் அவள் பெயரால் முலைப்பரம்பு எனப்பட்டது. இன்று மனோரமா காவலா என்று அழைக்கப்படுகிறது. [தாயாதிக்க மரபுடைய கேரள நாட்டில் பெண்ணுக்கு மார்பு ஓர் மங்கல உறுப்பு என்பதால் அதை மறைக்க வேண்டியதில்லை என்று நம்பினர். அதை முலை முகம் என்று அழைத்துச் சிறப்பித்தனர்]. நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகுதல் என்ற சொலவடை படி வைரமுத்து எழுதிய கருவாச்சி காவியத்தில் ஒரு பெண் தன் சேலை

முந்தானையால் நாக்கில் சுருக்கிட்டு வெடுக்கென்று பிடுங்கிக் கொள்வாள். ஆக உறுப்பைத் திருகி எறிதல் என்பது காலங்காலமாக இருந்து வரும் ஒரு செயல்பாடாகும்.

ஷீலா னா கிக்ஸ்

ஷீலா னா கிக்ஸ் என்ற சிற்பத்தை 12ஆம் நுற்றாண்டில் ஹீர்ஃபோர்டுஷயர் என்ற ஊரில் கட்டப்பட்ட கில்பேக் தேவாலயத்தில் காணலாம். இக் கட்டிடத்தில் தமது பெண்ணுறுப்பைப் பிறர் காணும் வகையில் பிறந்த மேனியாக நிற்கும் பல பெண் சிற்பங்கள் உள்ளன. இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் இத்தகைய சிற்பங்கள் ஏராளமாக [100+] உண்டு. ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளில் காலப்போக்கில் இவற்றில் சில மாற்றம் ஏற்பட்டு ஆண்களோடு இணைந்த நிலையில் [ரதி மன்மதன் போல] சிற்பங்கள் செய்து வைக்கப்பட்டன. பெரிய கட்டிடங்களில்



தேவாலயங்களில் ஷீலா னா கிக்ஸ்

கதவுகளில் உயர்ந்த கோபுரங்களில் மாடங்களில் பெண்ணுறுப்புச் சின்னங்கள் இடம்பெற்றன. இச்சின்னம் இருந்தால் அந்தப் பகுதியில் பேய் பிசாசு, பில்லி, சூனியம், சாவு போன்ற அச்சுறுத்தல்கள் இருக்காது என்று மக்கள் நம்பினர்.

புனித விலக்கு


யாரும் தொடக்கூடாத அளவுக்கு துய்மையானது என்பதைத் தூய விலக்கு *(sacred taboo)* அல்லது புனித விலக்கு என்பர். வேத நூல், பூஜை பொருட்கள் சாமி சிலைகள் போன்றன இவ்வகையைச் சார்ந்தன. அது போலவே அன்று பாலுறுப்புச்சின்னங்களும் புனிதமானவையாகக் கருதப்பட்டன. இவ்வாறு புனித விலக்கு *[sacred taboo]* என்று கருதப்பட்ட பெண்ணுறுப்புச்



சின்னம் தெய்வ சக்தி உடையது என்று நம்பப்பட்டதால் குழந்தைகளுக்கு அரசிலை வடிவில் வெள்ளியில் செய்து அணிவிக்கும் பழக்கம் தமிழ்நாட்டிலும் உண்டு. இதனால் தீய சக்திகள் குழந்தையைத் தாக்காது. இச்சின்னம் குழந்தைக்குத் தற்காப்புச் சின்னமாக விளங்கும் என்பது மக்களின் நீண்ட கால நம்பிக்கை.

தாமரை ஓர் பதிலி

பவுத்த டாமயத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த வைதீக மரபிலும் பெண் உறுப்பு வழிபடு பொருளாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக தாமரைப் பூவைக் காட்டத் தொடங்கினர். தாமரை அல்லது பத்மம் யோனிக்குப் பதிலியாகக் [substitute] கொள்ளப்பட்டது. வட இந்தியாவில் பெண் உறுப்பைக் காண்பிக்கும் உருவில் உள்ள லஜ்ஜா கௌரி என்ற பெண் தெய்வம் வேதக் கடவுளாக அறியப்படுகிறது. முதலில் பெண் உறுப்பில் இருந்து புறப்பட்டு வரும் ஒரு கொடியில் தாமரை பூத்திருப்பது போன்ற வடிவங்கள் அமைக்கப்பட்டன. அதன் பிறகு அந்த இடத்தில் வெறும் தாமரையே இடம்பெற்றது. பின்னர் லஜ்ஜா கவுரியின் முகத்துக்குப் பதிலாகவும் பெண் உறுப்புக்குப் பதிலாகவும் தாமரையை வைத்து வடிவமைப்பது மரபாயிற்று. **மக்களைக் காக்கும்**



ஒரே பெண் வேதக் கடவுள் லஜ்ஜாவதி ஆகும். இவளது சில உருவங்களில் பெண்ணுறுப்புப் பெரிதாகவும் திறந்திருப்பது போலவும் அதாவது குழந்தை பெறும் நிலையில் இருப்பது *[birthing posture]* போல வடிவமைக்கப் பட்டிருக்கும்.

இந்து சமயப்படி ஆதித்தாயான தேவ ஹூதி என்பவள் பெண்ணுறுப்பின் பெயரால் அழைக்கப்பட்டாள்.

தாமரைக் கொடி

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித நாகரிகத்தில் பெண்ணுறுப்பு பெரியதாகக் காட்டப்படும் சிலைகள் வைத்து வணங்கப் பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. சிந்து சமவெளி நாகரிகத்தில் பெண்ணுறுப்பு

வழிபாடு இருந்ததற்காக அகழ்வாய்வுச் சான்றுகள் உண்டு. சில நூற்றாண்டுகள் கழித்துத் தென்னிந்தியாவில் கிடைத்த சிலைகளில் பெண் உறுப்புக்குப் பதிலாகத் தாமரை வடிவத்தை வைத்து இவ் வழிபாடு நடந்துள்ளது. பெண்ணுறுப்பு தெரிவதாக இருக்கும் சிலைகளில் முகத்துக்குப் பதிலாக தாமரை மலர் இடம்பெற்றிருக்கும். பொதுவாக பெண்மையின் சின்னமாக தாமரை புரிந்து கொள்ளப்பட்டது. இந்து சமயத்தில் அமைதியான உருவம் கொண்ட சரஸ்வதி, இலட்சுமி போன்ற பெண் தெய்வங்கள் தாமரையின் மீது அமர்த்தப்பட்டன.



ஆணாதிக்கப் புராணக் கதை

லஜ்ஜா கவுரிக்கென ஒரு புராணக் கதையும் புனையப்பட்டது. இவளைப் பற்றி தேவி மகாத்மியத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. எனினும் இவளையும் சிவனுடன் இணைத்து ஒரு கதை புனையப்பட்டது. ஸ்ரீ லீலா இயற்றிய தீர்த்த யாத்ரா பிரபந்தத்தில் இக்கதை காணப்படுகிறது. சிவன் ஒரு கனத்த போர்வையைப் பார்வதியிடம் கொடுத்துவிட்டு வெளியூர் சென்று விடுகிறார். ஒரு எலி அந்தப் போர்வையைக் கடித்துக் குதறிவிடுகிறது. பார்வதி ஒரு தையல்காரரை அழைத்து அந்தப் போர்வையைத் தைத்துத் தரச் சொல்கிறாள். அவன் பார்வதியை அடைய விரும்புகிறான். போர்வை கிழிந்ததை அறிந்தால் கணவர் கோபிப்பாரே என்று அஞ்சிய பார்வதி வேறு வழியின்றி தையற்காரனின் ஆசைக்கு இணங்கினாள். தையற்காரனாக வந்திருப்பது சிவன் என்பது அவளுக்குத் தெரியாது. அவள் கலவிக்குத் தயாரான நிலையில் சிவன் தன் சுய ரூபத்தை காட்டி, 'நீ இப்படியே இருக்கக் கடவாய்' என்று சபித்துவிடுகிறார். அதனால் லஜ்ஜா கவுரி லஜ்ஜையின்றி பெண் உறுப்பு விரிந்து காணப்பட்ட நிலையில் காட்சி தருகிறாள். இது ஓர் ஆணாதிக்கச் சிந்தனை மலிந்த கதை ஆகும்.

லஜ்ஜா கவுரி சுதந்திர தேவி



ரிக் வேதத்தில் லஜ்ஜா கவுரி என்பவள் பிறந்த மேனிப் பெருந் தெய்வமாகச் சுதந்திர தேவியாகப் [1. 89: 10] போற்றப்படுகிறாள். இவளது முகம் தாமரை மலராக விளங்க பிறந்த மேனிக் கோலத்தில் நிறைய பொன் நகைகள் அணிந்து அலங்கார பூஷிதையாகக் காட்சி தருகிறாள். ஆனால் பெண் உறுப்பு பலரும் பார்க்கும்படி காணப்படும். வேதத்தில் சுட்டப்பட்டிருக்கும் சில பெண் கடவுளரில் இவளும் ஒருத்தி என்பது குறிப்பிடத்தக்கது. வேதம் ஆதியில் வணங்கப்பட்ட பெண் உறுப்பையும் அதற்குரிய தாய்த் தெய்வ கோட்பாட்டையும் தன்னுள் பதிவு செய்துள்ளது.

பத்மம்

புத்த சமயம் தாமரையைப் பத்மம் என்று அழைத்தது. பத்மம் மணி ஹ்யும் என்ற மணிமந்திரம் ஆணும் பெண்ணும் இணைந்த வடிவத்தை மந்திரமாக உச்சாடனம் செய்தது. அனைத்து யந்திரங்களும் தாமரை இதழ் வடிவத்துடன் வரையப்பட்டன. அறுகோண

யந்திரம் ஆணும் பெண்ணும் இணைந்த வடிவத்தை உணர்த்தின. மேல் முக்கோணம் ஆணையும் கீழ் நோக்கிய முக்கோணம் பெண்ணையும் குறித்தது. இது சம்போக நிலையில் அமைந்த அறுகோணச் சக்கரம் ஆயிற்று. தாந்திரிகத்தில் இருந்து வந்த தனி பெண் உறுப்பு வழிபாடு [யோனி வழிபாடு] மெல்ல மெல்ல சம்போக நிலை வழிபாடாக

It consists in the worship of a picture of the female organ drawn in the centre of another consisting of a representation of nine such organs, the whole of which forms the *Sri Cakra*.




FIG. 7
Yantra




FIG. 8
Yantra




FIG. 9
Yantra




FIG 10
Sri-yantra

வளர்ச்சி பெற்றது. வைணவ சமயத்தில் நெற்றியில் இடும் திருமண் காப்பில் நடுக்கோடு சிவந்த நிறமாக இருக்கும் இது இலட்சுமி தாயாரைக் குறிக்கிறது. இச்சிவப்புக் கோடு இல்லாமல் திருமண் காப்பு என்னும் நாமம் இடக் கூடாது என்பது விதி. அங்கும் தாயாருக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கபப்டுகிறது. இலக்குமி பத்மாவதியாகவே தாமரை மலரில் அமர்ந்தும் அதனைக் கைகளில் தாங்கியும் காட்சி தருகிறாள்.

பூசாரிணிகள்

இந்தியாவின் பல மாநிலங்களில் தாந்திரிக வழிபாட்டுக் கோயில்களில் தாமரை முகம் கொண்ட லஜ்ஜாவதி தெய்வமாக வணங்கப்பட்டாள். ஆந்திராவில் நாகர்ஜுன கோண்டாவில் லஜ்ஜா கவுரி சிலை முழு நிர்வாணப் பெண்ணுருவில் உண்டு. இங்குப் பலர் பிள்ளை வரம் கேட்டு வந்து வணங்குகின்றனர். அங்கு எல்லம்மா, மாதங்கி [மாது அங்கம்] கோதாரி, கோத் மாயி என்ற பெயர்களில் பெண்ணுறுப்பு வழிபாடு நடந்தது, கோயில்களில்



பிறந்த மேனிப் பெண் தெய்வங்கள் காணப்பட்டன. சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை இக்கோயில்களில் பெண்களே பூசாரிகளாக இருந்தனர். இவர்களின் உறுப்புகள் வழிபடு பொருளாக விளங்கின. மக்கள் இவர்களை மனிதத் தெய்வங்களாக கருதினர். அதனால் ஜோதி எனப்பட்டனர். இவர்களை எவரும் திருமணம் செய்வதில்லை. காலப்போக்கில் இப் பூசாரிப் பெண்களில் சிலர் தாசிகள் ஆகும் நிலைமைக்குத் தள்ளப்பட்டனர்.

குமரி வழிபாடு

நேபாளத்தில் வஜ்ராயன் பவுத்த சமயத்தில் பெண்ணுறுப்பு வழிபாடு சிறப்பாக நடை பெற்றது. குமரி என்ற பெயரில் சிறுமி ஒருத்தி



தெரிவு செய்யப்பட்டு வழிபடப்படுவாள். இவள் பூப்படைந்ததும் கோயிலை விட்டு வெளியேற்றப்படுவாள். தினமும் இவள் பூஜிக்கப்பட்டதால் இவளுக்கு வேகமாக நடக்கவோ வேலை எதுவும் செய்யவோ தெரியாது. பூப்படைந்த பிறகு இவளை யாரும் வேலைக்கும் வைத்துக் கொள்ளமாட்டார்கள்; திருமணமும் செய்து கொள்ள மாட்டார்கள்.

குஜராத் மஹாராஷ்டிரா மாநிலங்களில்

குஜராத் மஹாராஷ்டிரா மாநிலங்களில் நாகநாதர் கோயில்களில் பெண்ணுறுப்பு வழிபாட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. முதலில் பெண்ணுறுப்பு வழிபாட்டுக் கோயில்கள் பின்னர் ஆணுறுப்பு வழிபாட்டுக் கோயில்களாகவும் மாறி அதன் பிறகு அவை நாகத்துக்கான கோயில்களாகிவிடுவது இயற்கை. அதன் பிறகு அங்கு ஆவுடையுடன் கூடிய லிங்கம் இடம் பெறும். பீஜப்பூர் மாவட்டத்தில், அமராவதி நகரில் இதற்கான சிற்ப ஆதாரங்கள் உள்ளன. இவ்வழிபாடு 2, 3 ஆம் நூற்றாண்டுகளிலேயே நடந்திருப்பதாகச் சான்றுகள் கிடைத்துள்ளன.

கர்நாடக மாநிலத்தில் உடுப்பி நகருக்கு அருகில், பர்கூரில், சித்தன்னக் கோட்டையில் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெண்ணுறுப்பு

வழிபாட்டுச் சிறப்பங்கள் கிடைத்துள்ளன. பர்கூர் என்பது அலூபா அரசின் தலைநகராக விளங்கியது. அப்போது அலூபா அரசர்கள் இவ்வழிபாட்டைப் பின்பற்றினர். அதற்காகக் கோயிலும் அமைத்திருந்தனர்.

அஸ்ஸாமில்



அஸ்ஸாமில் இன்றும் காமக்யா கோயிலில் பெண் உறுப்பு வழிபாடு சிறப்பாக நடை பெறுகிறது. பெண்களையும் அவ்வாறு அமர வைத்துப் பூ போட்டு குங்குமம் தடவி வழிபடும் மரபு உள்ளது. தாட்சாயினி தன் தந்தை தட்சன் நடத்திய யாகத்திற்குத் தன் கணவன் சிவனை அழைக்கவில்லை என்பதால் கோபப்பட்டு அந்த யாகத் தீயில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள். அப்போது அவளது உடல் உறுப்புகள் பல்வேறு பகுதிகளில் தெறித்து விழுந்தன. அவளது பெண் உறுப்பு விழுந்த இடம் காமக்யா என்று நம்பப்படுவதால் இங்கு எந்தப் பெண்ணுக்கு பூஜை செய்தாலும் அது பார்வதியின் உறுப்புக்கு செய்யப்படும் பூஜையாகக் கொள்ளப்படுகிறது.

ஆவுடை வழிபாடு

பவுத்த சமயத்தில் வஜ்ராயன பவுத்தம் பெண் உறுப்பு வழிபாட்டைக் கொண்டிருந்தது. இதனைக் காஞ்சிபுரத்தில் உள்ள காமாட்சி கோயிலில் காணலாம். காஞ்சி பவுத்த சமயத்தின் தலைமையகமாக இருந்தது. இங்கிருந்து சீனா சென்ற பல்லவ மன்னர் பவுத்த துறவி போதி தர்மர் அங்கு ஜென் பவுத்த சமயத்தைப் பரப்பினார். அது முதல் கிழக்கு ஆசிய நாடுகளில் பவுத்தம் பரவியது. அங்கு போதி தர்மர் ஒரு தெய்வமாகப் போற்றப்படுகிறார். அவரே ஷாவொலின் மடங்களைத் திறந்தார்.



பெண் உறுப்பு வழிபாடு ஆதிகாலம் தொட்டு வருவதால் அதனை உள்வாங்கிக் கொண்ட பவுத்த சமயம் காமக் கோட்டம் என்ற பெயரில் ஐந்து கோயில்களை எழுப்பியது. மீனாட்சி, காமாட்சி, நீலாயதாட்சி கோயில்கள் இவ்வகையின. இங்கு ஆவுடை மட்டுமே வழிபடு பொருளாக இருந்தது. அவ்வாறு தோன்றி பின் சைவ மரபுகளுக்கு ஏற்ப மற்றப்பட்டவை மதுரை மீனாட்சி கோயில், நாகப்பட்டினம் நீலாயதாட்சி கோயில் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயில் போன்றனவாகும். மீனாட்சி அம்மன் கோயிலிலும் அகிலாண்டேஸ்வரி கோயிலிலும் பள்ளியறை அம்மன் சந்நிதியில் உண்டு. மீனாட்சி கோயிலில் பள்ளியறை (கல்வி) பூஜை சிறப்பானது. அது தெய்வத் திருமணம் நடந்த திருத்தலம். துவாத சாந்தப் பெருவெளி ஆகும். ஆணும் பெண்ணும் இணைந்த சம்போக ஸ்தலம். ஆனால் அகிலாண்டேஸ்வரி கோயிலில் அம்மன் தனித் தெய்வம் ஆவாள். அவளுக்குப் பிடித்த தாழம்பூவும் அதன் மணமும் சிவனுக்கு ஆகாது; அங்குப் பள்ளியறை பூஜை கிடையாது. அங்கு அவள் வராகியாக நாக ரூபிணியாக இருக்கிறாள்.

பூப்புக் குருதி வழிபாடு

அஸ்ஸாமின் காமாக்யா கோயிலில் தெய்வம் பூப்படையும் மூன்று நாட்களும் கோயில் பூட்டப்படும். இந்நிலை கேரளத்தில் உள்ள சில பகவதி கோயில்களிலும் உண்டு. அப்போது பகவதி உடுத்தியிருந்த உடையில் காணப்படும் சிவப்புக் கறை பட்ட துணியில் இருந்து நூல் பிரித்துப் பிரசாதமாக வழங்குவர். இப்பிரசாதம் செல்வாக்கு உள்ள சிலருக்கு மட்டுமே கிடைக்கும். எல்லோருக்கும் கிடைக்காது.

மந்திரசக்தி கொண்ட சுரப்புகள்




பெண் உறுப்பு வழிபாட்டில் பெண்ணின் சுரதமும் பூப்புக் குருதியும் மந்திர ஆற்றல் உடையனவாக நம்பப்பட்டன. பழங்காலத்தில் இதனைச் சேகரித்து மந்திரச் செயல்களுக்கு மாரகம், வசியம் ஆகர்ஷணம் போன்றவற்றிற்குத் தாந்திரிகர்கள் பயன்படுத்தினர். முட்டுத்துணியை புதிர வண்ணார் வெள்ளாவியில் வைத்து சூனியம் செய்வினை போன்றவை செய்தனர். பெண்ணின் சுரத நீரில் மருத்துவத்தன்மை இருப்பதாக நம்பப்பட்டது. இதனைச் சாண்டு என்றும் பூப்புக் குருதியைத் துமை என்றும்

பரிபாஷையில் வழங்கப்பட்டன. இவை இரண்டும் மருந்துப் பொருள்களாக விளங்கின.

சைவ சமய எழுச்சிக்குப் பிறகு பௌத்தம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட காலத்தில் பௌத்த துறவிகள் சிலர் சித்தர்களாக மலைக் குகைகளில் வசித்து வந்த போது சாண்டு, தூமை ஆகியவற்றைக் கொண்டு செய்வினை செய்தல் சூனியம் வைத்தல். ஏவல் செய்தல் போன்ற மாந்திரிகம் மற்றும், இளமையைத் தக்க வைக்கும் காயகல்பம் தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர். பவுத்தம் பரவிய சீனாவில் இம்மருந்து இன்றும் புழக்கத்தில் உண்டு. செய்வினை சூனியத்துக்குப் பயந்து பெண்கள் தமது தீட்டுத் துணிகளை பிறர் கண் படாமல் மறைத்து அப்புறப்படுத்தினர் அல்லது தீ வைத்துக் கொளுத்தினர். இன்று இப்பழக்கம் மாறிவிட்டது.

ஆவுடையும் லிங்க பாணமும்

பெண் உறுப்பு வழிபாடும் ஆண் உறுப்பு வழிபாடும் காலப்போக்கில் இணைந்து பல சமயங்களில் ஒரே வழிபாடாக மாறிவிட்டது. ஆவுடை பெண் உறுப்பைக் குறித்தது; அதன் மீது நிற்கும் லிங்க பாணம் ஆண் உறுப்பை குறித்தது. இவை இரண்டும் இணைந்து சிவசக்தி சங்கமத்தைக் குறிப்பதாகச் சைவ சமய எழுச்சிக்




காலத்தில் புதிய கதைகள் தல புராணங்கள் தோன்றின. மக்கள் சிவ சக்தி வழிபாட்டில் நாட்டம் கொள்ளலாயினர். கோயில்களில் தனி சன்னதி சிவனுக்கும் அம்மனுக்கும் எழுப்பப்பட்டன. ஆயினும் சாமி இருக்கும் சந்நிதி கர்ப்ப கிரகம் என்றே பழைய பெயரில் அழைக்கப்பட்டது. கர்ப்ப கிரகம் அல்லது கரு அறை என்பது பெண் உறுப்பு வழிபாட்டின் மறுபெயர் ஆகும்.

மேரி மாதா வழிபாடு

ஐரோப்பாவின் பல பகுதிகளில் பெண் உறுப்பைக் குறிக்கும் வகையில் மலைப் பிளவுகளுக்குள் சென்று அங்கு பெண் உறுப்புச் சிலைகள், ஓவியங்கள் சிற்பங்கள் வைத்து இரவு முழுக்க இருந்து பிறந்த மேனிப் பெருங்கடவுளை வணங்கி வந்தனர்.

இத்தெய்வங்கள் ஒவ்வொரு நாட்டிலும் இடத்திலும் பல பெயர்களில் வழங்கப்பட்டன. பின்னர் கால மாற்றம் ஏற்பட்ட போது அனைத்தும் ஒன்றாக்கப்பட்டு ஒரே மாதாவாக உருவாகிவிட்டது. ஆங்காங்கே வணங்கி வந்த மேடோனா, ஆக்னெஸ், பெலிண்டா போன்ற பெண் தெய்வங்கள் அல்லது தாய்த் தெய்வங்கள் ரோம கத்தோலிக்கச் சமயத்தில் இரண்டறக் கலந்துவிட்டன. மக்கள் சென்று வணங்கிய மலைப் பிளவு ஒரு அடையாளமாக அன்னை மேரி கோயில்களில் முன்பகுதியில் இடம்பெற்று விட்டது. இதனை கெபி என்பர்.





தாமரை வடிவத்தில் அமைந்த பௌத்த கோயில்

இந்து சமயத்தில் துடியான பல பெண் தெய்வங்கள் காலப்போக்கில் பேர் மாறி காளியம்மன், மாரியம்மன் என்ற பொதுப் பெயர்களில் வழங்கலாயின. கேரளாவில் இத் தெய்வங்கள் பகவதி என்ற பொதுப்பெயர் பெற்றுள்ளன. வங்காளத்தில் வணங்கப்பட்ட கங்குலி போன்ற தெய்வங்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வழக்கிழந்து துர்காவுக்குள் சங்கமமாகிவிட்டன.

இவ்வாறு பெண் உறுப்பு வழிபாடு என்பது பெண் தெய்வ வழிபாடாகித் தாய்த் தெய்வ வழிபாடாகி சிவசக்தி வழிபாடு, அம்மன் வழிபாடு என உருமாறிப் புராணிகத் தெய்வ வழிபாடாகி விட்டது.

4. ஷஷ்தி - வட இந்தியாவின் கருக்காத்தம்மன்

வளர் பிறையிலும் தேய்பிறையிலும் சஷ்டி என்பது ஆறாம் திதி ஆகும். வங்காளத்திலும் ஒடிஸாவிலும் ஆறு முகம் கொண்ட பெண் தெய்வத்தைக் கருவளம் மற்றும் குழந்தை நலம் வேண்டி வணங்குகின்றனர். இவளுக்கு ஆறு முகம் இருப்பதால் இவளை சஷ்தி என்றனர். இந்த ஆறுமுகமும் மேலும் கீழுமாக மும்மூன்று என்றும் முன்னால் மூன்று பின்னால் மூன்று என்றும் [320-550CE] கருத்துகள் நிலவுகின்றன. ஆனால் இவளுக்குக் கைகள் இரண்டு மட்டுமே உண்டு. தன் கையில் ஏழெட்டு குழந்தைகளை வைத்திருப்பாள். பூனை வாகனத்தில் வருவாள்.

சஷ்தி தோற்றமும் வரலாறும்

சஷ்திக்கென்று ஆரம்ப காலத்தில் உருவம் எதுவும் கிடையாது. அவளை ஒரு நீர் நிறைந்த கரகத்தை வைத்தும் சாணி உருண்டையைப் பிடித்து வைத்து அதில் மஞ்சள் குங்குமம் வைத்தும் வணங்கினர். கரகம், கலசம் என்பன பெண் உறுப்பு வழிபாட்டை குறிப்பன. சிவப்பு நிறம் பூப்புக் குருதியைக் குறித்தது. இதனால் ஆலமரத்தடியில் ஒரு சிவப்புக் கல்லை வைத்தும் வணங்கினர். கிபி இரண்டாம் நுற்றாண்டைச் சேர்ந்த குஷானர் ஆட்சிக்காலத்தில் சஷ்தியின் உருவம் நாணயங்களில் பொறிக்கப்பட்டது.





சாத் பண்டிகை

சஷ்தி என்பவள் வரலாற்றுக்கு முந்தைய காலத்துத் *[pre historic deity]* தெய்வம் ஆவாள். பின்னர் கி.பி. எட்டு ஒன்பதாம் நுற்றாண்டுகளில் தோன்றிய புராணங்கள் இவளைப் பார்வதியாகவும் தேவசேனையாகவும் கதைகள் சமைத்தன. சஷ்தி தேவ்யுபாக்கியானம் என்பது பின்னிணைப்பாகப் பிரம்மவைவார்த்த புராணம் தேவி பாகவத புராணம் போன்றவற்றில் சேர்க்கப்பட்டு இவளது கதையை விரித்துரைக்கிறது. வங்காளத்தில் மங்கள காவியம் என்பதில் இவளது கதை சஷ்தி மங்கல் என்ற பெயரில் சேர்க்கப்பட்டுள்ளது. பின்னர் இத் தெய்வ வழிபாடு குஜராத், ஹரியானா மற்றும் பீஹாரிலும் பரவியது. ஹரியானாவில் இவளை ‘சாட்டி மாதா’ என்பர். பீஹாரின் சித்திரை மற்றும் கார்த்திகை மாத சஷ்டி அன்று

‘சாத் பண்டிகை’ என்ற பெயரில் வணங்கி மகிழ்வர்.

குழந்தைப்பேறும் நலமும் அளிக்கும் சஷ்தி

குழந்தைப்பேறு மற்றும் சுகப் பிரசவம் வேண்டுவோர் சஷ்தியை வணங்கினர். காலப்போக்கில் ஆண் மகவு வேண்டியவர்கள் சஷ்திக்குச் சிறப்புப் பூசைகள் செய்து மாதந்தோறும் வளர்பிறை சஷ்டி அன்று விரதம் இருந்தனர். பிரசவம் நடக்கும் அறையில் சாணி உருண்டைக்கு மஞ்சள் குங்குமம் வைத்து சஷ்தியாக பாவித்து வழிபட்டனர். குழந்தை இறந்து பிறந்தாலோ கருவில் கலைந்தாலோ அதற்கு சஷ்தியின் கோபமே காரணம் என்று



நம்பினர். குழந்தை பிறந்த ஆறாம் நாள் முதல் இருபத்தியோராம் நாள் வரைச் சிறப்பு வழிபாடுகள் செய்தனர். தொடக்கத்தில் துடியான தெய்வம் என்று அஞ்சப்பட்ட சஷ்தியை பிற்காலத்தில் சாந்த சொருபியாக மாற்றி ஸ்கந்தனோடு தொடர்புப்படுத்தினர்.

கருப்பை நோய் தீர்க்கும் சஷ்தி விரதம்

ஒரிசா மாநிலத்தில் சித்திரை மாத சஷ்டி அன்று அசோகா சஷ்தி என்ற பெயரில் சஷ்திக்கு விரதம் இருப்பார்கள். அன்று காலை வெறும் வயிற்றில் அசோகா மரத்தின் மொட்டுக்களைப் பச்சையாகத் தின்று தண்ணீர் குடித்து விரதத்தைத் தொடங்குவர். அசோகா மொட்டுகளும் இலைகளும் கருப்பையில் இருக்கும் கழிவுகளை அகற்றிக் கருவைத் தங்க வைக்கும் என்பது நம்பிக்கை.

மாதந்தோறும் சஷ்டி அன்று சஷ்தி விரதம்

சஷ்தியை சாந்தன், ஆரண்ய, கந்தமா, லுனந்தனா, சாப்டி, துர்கா, சஷ்டி, மூலகா, அண்ணா, சீதளா, கோ ரூபினி / அசோகா என்ற பெயர்களில் 12 மாதங்களிலும் சஷ்டி திதி அன்று விரதம் இருந்தனர். ஆடி மாதம் ஆரண்ய சஷ்டி அல்லது ஜமாய் சஷ்டி கொண்டாடப்படும்.



வங்காளத்தில் புரட்டாசி மாதத்தில் சஷ்டி அன்று சீதளா சஷ்தி என்ற பெயரில் துர்கா பூஜை கொண்டாடுகின்றனர். அன்றும் பெண்கள் விரதமிருந்து தங்களின் பிள்ளைகள் ஆடு மாடுகள் மற்றும் பயிர் வளம் செழிக்க சஷ்திக்குப் பூசைகள் செய்வர். ஐப்பசி மாதம் சுப்ரமணிய சஷ்தி என்ற பெயரில் கந்த சஷ்டி போல சுப்ரமணியாருக்கும் தேவசேனைக்கும் திருமணம் நடந்த விழா கொண்டாடப்படுகிறது.

லுந்தோன் சஷ்தி அன்று பீர்க்கங்காயைப் படைத்து வணங்குவர். மூலோ சஷ்தி அன்று முள்ளங்கி நைவேத்தியம் செய்வர். ஜமாய் சஷ்தி அல்லது ஆரண்ய சஷ்தி என்பது விநோதமானது அன்று மாமியார் தம் மருமகனின் ஆயுள் தீர்க்கம் வேண்டியும் அவர்கள் சுபிட்சமாக

வாழ்வதற்காகவும் விரதம் அனுஷ்டிப்பர். தற்போது குழந்தை பிறப்பு, பூப்பு, திருமணம் ஆகிய பெண்களுக்குரிய நாட்களில் சஷ்தியை வணங்கும் மரபு வளர்ந்து விட்டது.

சஷ்தியும் கருப்புப் பூனையும்

சஷ்தி பற்றி வடநாட்டில் வழங்கும் கதை ஒன்று அவள் குழந்தை நலம் காப்பவள் என்பதை உறுதி செய்கிறது. ஒரு வீட்டில் மருமகள் தன் வயிற்றுப் பசி காரணமாக உணவுப் பொருட்களைத் திருடித் திருடித் தின்றாள்.



மாமியார் விசாரித்தபோது அங்கிருந்த கறுப்புப்பூனை மீது பழி சுமத்தினாள். அந்த மருமகளுக்குப் பிறக்கும் பிள்ளைகள் அனைத்தையும் அவ்வீட்டில் இருந்த அந்தக் கருப்புப் பூனை தூக்கிக் கொண்டு போய் சஷ்தியிடம் கொடுத்துவிட்டது. குழந்தையைக் காணோம் என்றதும் அண்டை அயலார் அந்த மருமகளைப் பிள்ளை தின்னி ராக்கச்சியாகக் கருதி அஞ்சினர்.

அடுத்த முறை குழந்தை பிறந்ததும் பூனை மறுபடி குழந்தையைத் தூக்கிக் கொண்டு போன போது அவளும் அந்தப் பூனையின் பின்னால் தொடர்ந்து போனாள். பூனை சஷ்தி கோயிலுக்குள் நுழைந்தது. அவளும் அக்கோயிலுக்குள் போய் சஷ்தியிடம் இறைஞ்சித் தன் குழந்தைகளைத் திரும்பத் தரும்படி வணங்கிக் கேட்டாள். சஷ்தி அவளைப் பூனையிடம் மன்னிப்புக் கேட்கும்படி சொல்ல அவளும் தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டாள் சஷ்தி தேவி அவளது ஏழு குழந்தைகளையும் அவளிடம் கொடுத்தனுப்பினாள். அன்று முதல் அவள் தன் குழந்தைகளின் நலம் வேண்டியும் இனிப் பிறக்கப போக்கும் குழந்தைகளின் நலத்துக்காகவும் வளர்பிறை சஷ்டி அன்று விரதம் இருந்து வந்தாள்

சஷ்தியும் பார்வதியும்

சஷ்தி வணக்கம் ஆதிகாலத்தில் மக்கட்பேறு தொடர்புடைய வழிபாடாக வட நாட்டில் இருந்தது. தென்னாட்டில் இதற்கு நிகராகப் பிடாரி வழிபடப்பட்டாள். பின்னர் தோன்றிய வைதிகச் சமயங்கள் சஷ்தியை மூத்த தாய் என்ற பொருளில் ஏற்றுக்கொண்டு பார்வதியாகத் தமது புராணக்கதைகளில் சேர்த்துக்கொண்டன. ஆனால் வங்காளத்தில் மட்டும் சஷ்தியும் பார்வதியும் வெவ்வேறு தெய்வங்களாகவே போற்றப்படுகின்றனர். விநாயகர் தலை வெட்டுப்பட்டு அவருக்கு வேறு தலை வேண்டிய போது பார்வதி தேவி சஷ்தியை வணங்கியதாகச் சொல்லப்படும் கதை பார்வதிக்கும் மூத்தவள் சஷ்தி என்பதை உணர்த்துகிறது.



சஷ்டியும் தேவயானையும்

வங்காளம் தவிர்த்த மற்ற மாநிலங்களில் ஆரம்பத்தில் சஷ்டியைப் பார்வதி என்ற பெயரில் வைதிகச் சமயங்கள் ஏற்றுக்கொண்டன. பின்னர் அவளது ஆறு முகத்தைக் கார்த்திகைப் பெண்டிர் அறுவரால் வளர்க்கப்பட்ட ஸ்கந்தனுக்கு ஏற்றினர். அதன் பிறகு சில கதைகளில் அவன் மனைவி தேவசேனையாக சஷ்டியை மாற்றினர். தேவசேனையின் பல பெயர்களுள் ஒன்றாக சஷ்டியும் விளங்குகிறது. காலப்போக்கில் சஷ்டிக்கு அனுஷ்டிக்கப்பட்ட சஷ்தி வழிபாடும் அன்று மேற்கொண்ட சஷ்டி விரதமும் சிறப்பு வழிபாடும் கந்தனுக்கு மாறிவிட்டது, ஆனால் வட இந்தியக் கிராமங்களில் மட்டும் இன்றும் சஷ்தி கருக்காத்த அம்மனாகவே வணங்கப்பட்டு வருகிறாள்.

சட்டியில் இருந்தால்...

தமிழகத்தில் ஐப்பசியில் அனுஷ்டிக்கப்படும் கந்த சஷ்டி விரதம் சஷ்டி வழிபாட்டுடன் இணைந்துவிட்டது. இங்குப் பெண் தெய்வ வழிபாடு ஆண் தெய்வ வழிபாடாகவும் பரிணமித்தது. ஆறுமுகம் கொண்ட சஷ்திக்கு இருக்கும் விரதம் காலப்போக்கில் ஆறுமுகம் கொண்ட கந்தனுக்கு மாறியது. ஆனாலும் பக்தரின் வேண்டுதலும்

பலனும் ஒன்று தான். சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்ற பழமொழி சஷ்டியில் விரதம் இருந்தால் அகப்பையில் [கருப்பையில் கரு] வரும் என்ற பொருளை உடையது. ஆகக் குழந்தை வரம் வேண்டுவோர் சஷ்தி தேவிக்கு மேற்கொண்டு வந்த விரதத்தை தமிழ்நாட்டில் முருகனுக்கு மேற்கொண்டு அவன் சூர சம்ஹாரம் முடித்து தேவசேனையைத் திருமணம் செய்யும் நன்னாளை ஒட்டி நிறைவு செய்தனர். ஆறுமுகம் கொண்ட கந்தனோடு இருப்பதால் தேவசேனையும் சஷ்தி எனப்பட்டாள். வட இந்தியாவில் தேவசேனையை சஷ்தி என்ற பெயரில் வழங்குகின்றனர்.

நிறைவு

தென்னகத்தில் தேவசேனையை சஷ்தி என்று அழைப்பது கிடையாது. இங்கு சஷ்தி என்ற தெய்வமே காணப்படவில்லை. மாறாக பிடாரி, நாகம்மாவாக, நாகத்தம்மனாக, சிங்கம் பிடாரி, இளம்பிடாரி, பிடாரி அரசி என்ற பெயர்களில் கருக்காத்தம்மனாக புதிதாகப் பிறந்த குழந்தையையும் பிறக்கப் போகும் குழந்தையையும் காக்கும் தெய்வமாக வணங்கப்படுகிறாள்.

துணைநூற் பட்டியல்

1. *O. A. Wall, Eroticism in religions of the world*


2. *R.H. Kulkarni, Lajja Gouri - fertility and mother goddess worship (The New Indian Express 29th April 21)*

3. *Sheela na gig - architectural figure by John Harding (Britannica) 4. Wendy Diniger O'Flaherty, Women, Androgyns and other mythical beasts*

5. மயிலை சீனி வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும்

6. மணிமேகலை

7. ஷீலா நா கிக்ஸ், டாகினி, லிலித், லஜ்ஜா கவுரி பற்றிய கட்டுரைகள் பல உலாவி மூலமாகவும் கிடைக்கப்பெற்றன.


Sheela na gig
THE DARK GODDESS
OF SACRED POWER
Starr Goode

இந்நூலாசிரியரின் பிற நூல்கள்



முனைவர் செ. இராஜேஸ்வரி

எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1-21. வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் *21* நூல்கள்.
22. சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் **சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும்**

ஆங்கிலம்>தமிழ் (6)

23. Indian Women-Changes and Challenges (Co-Author)
24. The Globalisation : An Urban Theology
25. Water Privatisation (for PET, Madurai)
26. Assisted reproductive technologies and its Impact on Women (SIRD, Madurai)
27. Eco Vision and Mission
28. Bachelor's Study Materials for Social Science [IGNOU, Madurai] and others...

தமிழ் > ஆங்கிலம்

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள்(9)

29. Shade of the Flowering Tree
30. Songs of Dryness
31. Speaking with You
32. Language of Love
33. A Lady at the little gate
34. Honey Hive
35. Ambrosial Kiss (Editor)
36. Therapist of the Finest Art
37. Following Dusty Feet (in print)

பேரா. முனைவர் ஞானசேகரனின் நூல்கள்(6)

38. Emerging Mallarism
39. Festival of Lord Indra
40. Role of Devendirars in Indian war of Independence (Sundaralingam)
41. Mallariyan Literature
42. Re reading of Pallu literature
43. Frontyard without My Dad (Poem)

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்(9)

44. பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)
45. பெண் தெய்வ வழிபாடு
46. தேவேந்திரன்
47. மருதநிலப் பெண் தெய்வங்கள்
48. இருநிலத்தில் திருமுருகன்
49. முன்னோர் வழிபாடு
50. வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்
51. யானைக் கடவுள்
52. பெண் பூப்பின் புனித வழிபாடு

கவிதைத் திறனாய்வு நூல்கள் (5)

53. பாடுபொருளும் பாசப்பொருளும்
54. பூ மர நிழலின் களமும் காலமும்
55. "2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு
56. கவிதையில் காதல்
57. பயணக் கவிதைகள்

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் (3)

58. மொழிபெயர்ப்பியல் ஆய்வு
59. கவிதை மொழிபெயர்ப்பு
60 நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் *(Co-author)*

ஆங்கிலக் கவிதை மொழி பெயர்ப்பு(5)

61. எட்டுத்திக்கும் செல்வீர்
62. அவன் கடவுளுக்கு நிகரானவன்
63. செக்கச் சிவந்த ரோஜா
64. மணலும் நுரையும் - கலீல் ஜிப்ரான்
65. பாடல்கள் 14 - கலீல்ஜிப்ரான்

புனைவிலக்கியம் (2)

66. அமராவதியின் காதல் (சிறுகதைகள்)
67. ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)

Sangam classics in English (Selected poems) (3)

68. Ainkurunuuru
69. Kurunthokai
70. Puranaanuuru

₹.200